Flavour : According to U.S. society of flavour chemists, Flavour is defined as the sensation caused by those properties of any substance taken into the mouth which stimulates the senses of taste and smell. When making a salad or soups we often include different types of leaves and seeds. Not only for flavour, these leaves, seeds, roots, flowers etc are giving nutrition. They are rich in vitamins, minerals and contain a very good quality protein and supply dietary fibre.

Flavours are pleasant flavour, good flavour, agreeable flavour, delicious flavour, aromatic flavour, nice flavour, excellent flavour, and food flavouring.

Many natural flavour plants contain aroma compounds, Hydrocarbons including terpenes, monoterpenes and diterpenes. Other specific compounds contain nitrogen & sulphur. When adding these natural flavour plants to our routine diet it gives more energy, and health.

Some of the important flavour foods are listed below.

Garlic (Allium sativum) :

The most important flavour component in fresh garlic oil is allicin. It is an important flavouring agent, particularly in meat preparation, soups and sauces. It acts as a very good antiseptic and antispasmodic.

Corainder (Coriandrum sativum) :

Leaves, seeds and roots are used in cooking to flavour vegetables, fish, meat and soups. The essential oil is very useful in flatulence, colic, rheumatism, neuralgia etc. Corainder is considered to lessen the intoxicating effects of spirilaous liquors.

Cumin : (Cuminum cyminum)

The ground or whole seeds are used to flavour dishes. The seeds are useful to relieve flatulence, diarrhoea, colic and act as very good antihypertensive.

Cardamom : (Elettaria cardamomum)

The pods are used in curries, and

masalas. The seeds are also a breath freshner when chewed. It is sagely used as a carminative.

Saffron : (Crocus Sativum)

Saffron is added to foods for its pleasant flavour. It is a stimulant, and aphrodisiac. Its aphrodisiac activity is mainly due to the slight stimulation of central nervous system which is common to all essential oil.

Colour :

Apart from flavour, colour is the key to the nutrition. Eating fruits and vegetables every day won't guarantee we are getting enough essential nutrients. To get enough of disease - fighting - chemicals called phytonutrients, just add a single serving (a piece of fruit, cup of juice, and vegetables) from these Five Colour families, to our usual diet.

Red / Purple colour :

These foods contains anthocyanins, powerful antioxidants that may cut the risk of heart disease and stroke (eg). Brinjal : Solanum Melongena : It acts as a stimulant, hypnotic and expectorant.

RedColour

Any tomato based food provides a high dose of lycopene, (eg).Tomato : Lycopersicon esculantum : Tomato acts as a cooling and tonic. A study provides the lycopene can reduce the risk of prostate cancer.

Orange Colour

The beta carotene in orange foods boost eye and skin health and may decrease risk for certain cancers (eg) :Mango : Mangifera indica : The fruit acts as a laxative, diuretic and tonic.

Green :Colour

Green foods have a natural chemicals called isothiocyanates, which stimulates production of cancer fighting enzymes.(e.g) Fenugreek leaves : Trigonella foenum graecum : It is used for its cooling and laxative property. It reduces flatulence, and colic.

Yellow :- Yellow foods are rich in Vitamins.

(e.g) Acid or Sour lime : (Citrus aurantifolia) : It is a blood purifier and appetiser. Juice is an agreeable bevarage for those suffering from cough, bronchitis, liver and heart troubles.

ROOT FOR SUCCESS

Man needs life
Life needs hardwork
Hardwork needs ambition
Ambition needs discipline
Discipline needs self-control
Self control needs selfrespect
Self respect needs honesty
Honesty needs great attempt
Great attempt needs enthusiasm
Enthusiasm needs achievement
Achievement needs self confidence
Self Confidence is the secret of
- success.

V.HEMA
Final Year

நாடி என்றால்

மரு. T.R. சித்திக் அலி எம்.டி. (சி)

சித்த மருத்துவத்தில் நாடி மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். நாடி என்பது உடலில் உயிர் தரித்திருப்பதற்கு தேவையான சக்தி எதுவோ அதுவே நாடி எனப்படும். நாடியைப் பற்றி சதகநாடி நூலில்,

நாடி என்றால் நாடியல்ல ----------

நாடியது யாராய்ந்து பார்த்தாரானால்

நாடியுறும் பொருள் தெரிந்து நாடுவாரே

என

பல்வேறு விளக்கம் கூறி அவைமட்டுமல்லாமல் நாடியுறும் பொருள் தெரிந்து நாடுவாரே என்றதால் இங்கு நாடி என்பது நோயாளியை முழுமையாக அணுகி ஆராய்ந்து மருத்துவம் மேற்கொள்ளும் வழிமுறையைக் குறிப்பதாகும். அவ்வழி முறைகளாவன.

1. நோயாளியை கண்டவுடன் அவரின் தேகநிலையையானது வாத, பித்த, கப, தொந்த தேகியா என ஆராய்தல்.

2. நோயாளியின் வயதினைக் கொண்டு முத்தாதுக்கும் வயதுக்கும் உள்ள தொடர்பை ஆராய்தல். சராசரி வயது 100 எனக் கொண்டால் 0 - 33 வருடம் 4மாதம் வாதகாலம் அதில் 0-11 வருடம் 1மாதம் 10நாட்கள் வரை வாதத்தில் வாதம், 22வருடம் 2மாதம் 20 நாட்கள் வரை வாதத்தில் பித்தம், 33வருடம் 4மாதம் வரை வாதத்தில் கபம் ஆகும். இதுபோன்ற பித்தகாலம், கபகாலத்தையும் பிரித்து வயதுக்கும் முத்தாதுக்கும் உள்ள தொடர்பை ஆராய்தல்.

3. இருப்பிடம் - நோயாளியின் வசிப்பிடத்தை ஐவகை நிலங்களோடு ஒப்பிட்டு நிலத்துக்கும் முத்தாதுக்கும் உள்ள தொடர்பை ஆராய்தல்.

4. நோயாளி மருத்துவரை அணுகும் மாதத்தினைக் கொண்டு பெரும் பொழுதுக்கும் (இளவேனில், முதுவேனில், முன்பனி, பின்பனி, கார்காலம், கூதிர்காலம்) முத்தாதுக்கும் உள்ள தொடர்பை ஆராய்தல்.

5. நோயாளி மருத்துவரை அணுகும் நேரத்தினைக் கொண்டு சிறு பொழுதுக்கும் (காலை, முன்பகல், பின்பகல், இரவு, யாமம், வைகறை) முத்தாதுக்கும் உள்ள தொடர்பை ஆராய்தல்.

6. நோயாளி மேற்கொள்ளும் தொழிலைக் கொண்டு செயலுக்கும் முத்தாதுக்கும் உள்ள தொடர்பை ஆராய்தல்.

7. நோயாளியை எண்வகை பரிசோதனை மூலம் (நா, நிறம், மொழி, விழி, மலம், மூத்திரம், நாடி) சோதித்து அவைகளுக்கும் முத்தாதுக்கும் உள்ள தொடர்பை ஆராய்தல். இவைகள் அனைத்தும் சுகரண நிலையில் இருக்கும்போது உள்ள தொடர்பைக் கொண்டு நோயாளியின் நிலையையும் ஒப்பிட்டு ஆராய்ந்து இறுதில் நாடி மூலமாக நோயை கணித்து அதற்கு ஏற்ற மூலிகைகளை (மருந்தினை) சுவை வீரியம் பிரிவு அடிப்படையாகக் கொண்டு மருத்துவம் மேற்கொள்ளல் வேண்டும்.

சித்த மருத்துவமானது முதன்முதலில் இந்த பிரபஞ்சம் மற்றும் உயிரினங்கள் தோன்றியவுடன் இறைவனிடமிருந்து இயற்கையோடு இணைந்து தோன்றிய மருத்துவமாகும். இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துப் பொருட்களும் (அண்டமும், பிண்டமும்) பஞ்ச பூதங்களால் உருவானதே, மேலும் இம்மருத்துவம் பஞ்சபூதம். சுவை, முக்குற்றம் இவைகளை தொடர்படுத்திய அமைந்துள்ளது.

உயிர் தாதுக்களாகிய வளி, அழல், ஐயம் ஆகிய மூன்றும் உடலில் 1 : 1/2 : 1/4 என்ற விகித அடிப்படையில் கலந்து இயங்குகிறது. இந்த மூன்று தாதுக்களும் தனது இயல்பான மாத்திரை அளவிலிருந்து கூடுவதாலே (அ) குறைவதாலே நோய் உண்டாகிறது. இதற்கு இரண்டு காரணங்கள் மட்டுமே அவை 1. உணவு 2. செயல்.

உணவானது அறுசுவைகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது, அறுசுவைகளும் ஐம்பூதங்களில் இரண்டிரண்டாக இணைந்து உருவாகிறது. எனவே சுவை ஐம்பூதம், முக்குற்றம் இவைகளை தொடர்பை நன்கு அறிதல் வேண்டும்.

சுவை	பூதம்	முக்குற்றம்	தன்னிலைப்படுத்தும் குற்றம்
1. இனிப்பு	மண் + நீர்	கபம்	வாதம், பித்தம்
2. புளிப்பு	மண் + தீ	பித்தம்	கபம், வாதம்
3. உப்பு	நீர் + தீ	கபம், பித்தம்	வாதம்
4. கைப்பு	வளி + விண்	வாதம்	பித்தம், கபம்
5. கார்ப்பு	வளி + தீ	வாதம், பித்தம்	கபம்
6. துவர்ப்பு	வளி + மண்	வாதம்	பித்தம், கபம்

எனவே சித்தர்கள் "உணவே மருந்து, மருந்தே உணவு" என்ற அடிப்படைக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டே மருத்துவம் மேற்கொண்டனர். மேலும் உலகில் உள்ள அனைத்துப் பொருட்களுமே தட்பம், வெப்பம் என இரண்டு தன்மைகளில் ஒன்றை பெற்றிருக்கும். இதில் தட்பம் நீர் பூதத்தையும், கபத்தையும் ; வெப்பம் தீ பூதத்தையும், பித்தத்தையும் பெற்றிருக்கும். இவற்றைக் கொண்டே வாதத்தில் உட்டிணம், வாதத்தில் சீதளம், பித்தத்தில் உட்டிணம், பித்தத்தில் சீதளம், கபத்தில் உட்டிணம், கபத்தில் சீதளம் ஏற்படின் உண்டாகும். நோய்களையும் வாயுவில் வாயு, கபத்தில் வாயு என்று காற்றுடன் முத்தாதுகளும் இணைந்து உண்டாகும், நோய்களைப் பற்றியும் சதக நாடி நூலில் கூறப்பட்டுள்ளது.

இங்ஙனம் உண்டாகும் நோய்களை அறிவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட இயலாத காலத்திலும் தங்களுடைய அறிவாற்றலால் நோய்களை குணப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் இந் நவீன காலத்திலும் அறிவியலுக்கு அப்பாற்பட்டு பல விந்தைகளையும் நிகழ்த்தும் சித்த மருத்துவத்தை நமக்கும் இவ்வுலகததிற்கும் வழங்கிய பெருமைகள் அவர்களையேச் சாரும்.

மேலும் ஏகமூலிகை பிரயோகமாக ஒரு மூலிகையை சுவை, பஞ்சபூத மற்றும் முக்குற்ற அடிப்படையில் எங்கனம் பயன்படுத்தியுள்ளனர் என்பதை ஆராய்வோம்.

அதிமதுரம் : பயன்படும் உறுப்பு : வேர்

சுவை	: இனிப்பு	: மண் + நீர்
தன்மை	: தட்பம்	: நீர்
பிரிவு	: இனிப்பு	: மண் + நீர்

சுவை, தன்மை இவை இரண்டிலும உள்ள பஞ்சபூத சேர்க்கையின் அடிப்படையில் பிரிவு உண்டாகிறது. இப்பிரிவே நோய் நீக்கம் செய்வதில் அடிப்படையாக உள்ளது. இனிப்பு பிரிவை உடைய அதிமதுரம் கபத்தை அதிகப்படுத்தும் தன்மை உடையது அதே நேரம் வாதத்தையும், பித்தத்தையும், வாதத்தில் உஷ்ணத்தையும், பித்தத்தில் உட்டிணத்தையும் முழுமையாக நீக்கம் ஆற்றல் உடையது.

அதிமதுரத்தின் பொதுக் குணத்தால் தீரும் நோய்களை ஆராய்வோம்.
கத்தியரி முப்பிணியால் வருபுண் தாகங்
கண்ணோய்உன் மாதம்விக்கல் வலிவெண்குட்டம்
பித்தமெலும்புருக்கி ரிச்சரம் ஆவர்த்த
பித்தமத மூர்ச்சை விடபாகம் வெப்பந்
தத்திவரு வாதசோ ணிதங்கா மாலை
சருவவிடங் காமியநோய் தாதுநட்டங்
குத்திருமல் ஆசியங்கம் இதழ்நோய் இந்து
குயப்புணும் போம் மதூகமெனக் கூறுங்காலே

எனத் தேரையர் குணவாகட நூலில் அதிமதுரத்தால் தீரும் பிணிகள் என தேரன் கூறியுள்ளார்.

1. முப்பிணியால் வரும்புண் என்பது இயற்கை இரண சன்னியைக் குறிக்கும்.

காயத்தாம் வெம்டிமையாலே காயத்திற் பருக்க டோன்றி
மாயத்தா லுடைந்து காய்ந்து வளருவ தியற்கைதாம்...

உடலில் தோன்றும் வெம்மையால் பித்தக் குற்றம் தன்னளவில் மிகுந்து முக்குற்றத்தையும் கேடடையைச் செய்து பருக்கள் தோன்றி தானாக உடைந்து காய்ந்து அதன் சீழ் உடலில் ஊறி சன்னியை உண்டாக்குகிறது. இந்நோய்க்கு இனிப்புச் சுவையும் கப கூறுபாட்டையும் உடைய அதிமதுரத்தை எதிருறையாக வழங்க நோய் தீரும்.

2. தாகம் - நீர்வேட்கை ‘உறுதியுள்ள பித்தமது தோன்றில் வெப்பு
இருதயத்தில் கலக்கமது மறப்பு தாகம்'' சதகநாடி

உடலில் வறட்சியை உண்டாக்ககூடிய உணவு, செயலால் அழல் குற்றத்தை பெருக்கி மேல்நோக்கு வாயுவை தூண்டி இந்நோய் ஏற்படுவதால் அதிமதுரத்தை எதிருறையாக வழங்க குணமாகும்.

3. கண்நோய் நீர்எரிச்சல், நாவுலர்தல்

ஏவலாய் குழலாய் பித்தஞ் செய்குணம் விளம்பக் கேளாய்
கோலவேல் விழிசிவந்து குளிர்ந்திடி ருக்கு மல்லால்
சீலவே நீர்கடுத்து நொந்து சுறுக்கெனச்சி வந்து வீழும்
ஞாலமே கிறுகிறென்ற நாவுலர்ந்திருக்குங் காணே.
- இரத்தின சுருக்க நாடி.

எனும் நூலில் பித்தம் தன்னளவில் மிகுந்து விழி சிவந்தல், சுழலல், குழிவிழலல், கண் இருளல், சிறுநீர் எரிச்சல் மற்றும் நாவுலர்தல் ஆகியவற்றை உண்டாக்கும் என கூறப்பட்டுள்ளது. இதற்கு எதிருறையாக அதிமதுரம் வழங்க நோய் குணமாகும்.

4. உன்மாதம் (பைத்தியம்) உறுதியுள்ள பித்தமது தோன்றில் வெப்பு
மறதியுடன் கிறுகிறுப்பு பைத்திய ரோகம் (சதக நாடி நூல்)
உற்றிடும் வாதத்தோடு
உறவதால் பித்தமீறில்
நித்தமும் பிதற்றிப் பேசி
நினை விழந்திருப்பரென்று என்பதாலும்

பைத்தியம் (அ) உன்மாதம் அழல் குற்றம் தன்னளவில் மிகுவதாலும், வாதம் மிகுந்து பித்தத்துடன் சேருவதால் உண்டாகும் என்பதால் இதற்கு எதிருறையாக அதிமதுரம் வழங்க நோய் குணமாகும்.

6. விக்கல் : கூறிடவே பித்தமது மீறிற்றானால்
மேலான சோபமது விக்கல் மூர்ச்சை - அகத்தியர் நாடி.

பொதுவாக விக்கல் ''சேத்துமத்தின் கோதமலாது விக்கலடாது'' என கூறியிருந்தாலும் பித்தம் மிகும்போது விக்கல் உண்டாகம் என்று அகத்தியர் நாடியில் கூறியுள்ளதால் அழலால் பிறந்த விக்கலுக்கு மட்டும் எதிருறையாக அதிமதுரம் வழங்க குணமாகும். அதே நேரம் கபமிகுதியால் உண்டாகும் விக்கலுக்கு வழங்கினால் நோய் மிகும்.

7. வலிப்பு நோய் : வாதமெனும் நாடியது தோன்றில்
திரள்வாயு சூலை வலிகடுப்புத் தீரை - சதகநாடி நூல்

சிறுவிர லிரண்டு பக்கம் நாடிதான் சிதறி யோடில்
மருவிய காலுங் கையுங் வலித்துடன் மிகவே நோகும்

என்பதால் வாதம் தன்னளவில் மிகுவதாலும், மேலும் வாதம் தனக்குத் துணையாக அழலைச் சேர்த்து இந்நோய் ஏற்படின் எதிருறையாக அதிமதுரத்தை வழங்க தீரும். மாறாக வாதம் ஐயத்தை துணையாகக் கொண்டு இந்நோய் ஏற்படின் அதிமதுரம் வழங்கினால் நோய் அதிகப்படும்.

8. வெண்குட்டம் : 'வாதமலாது மேனிகெடாது' என்பதால் வாதம் தன்னளவில் மிகுந்து தோல் நோய் உண்டாகும்போது அழலும் துணையாக கேடடைந்து பாதிக்கப்பட்ட இடத்தில் வெளுப்பு, எரிச்சல், முடிவெளுத்தல் எனும் குறிகுணங்களுக்கு எதிருறையாக அதிமதுரம் வழங்க நோய் குணமாகும்.

9. பித்தமெலும்புருக்கி : உதியுள்ள பித்தமது தோன்றில் வெப்பு
உஷ்ணவாயுவத்தி சுரமதி சாரங்கள் - சதகநாடிநூல்.

இங்கு அத்தி சுரம் எனப்படுவது என்பை பற்றிய சுரமாகும். இது அழல் மிகுவதால் உண்டாவதல் இதற்கு எதிருறையாக அதிமதுரம் வழங்க நோய் தீரும்.

10. ஆவர்த்த பித்தம் (அ) ஆவுரு பித்தம் : ''தானான சரீரந்தான் வெதும்புந் தாகஞ்
சளியிளைப்புக் கடுப்புமா, யழற்சி யாகும்
பூனான வாய்தனிலே புளிப்பு யுறைப்புப்
புகழான மலசலந்தான் மஞ்சளிக்குங்
கோனான குறுமொழி கொண் டெங்கும் பார்க்குங்
கூத்தாடுங் கொக்கரிக்குங் கூவலாகும்
ஆனான வடிக்கடிக் கெழுந்தி ருக்கும்
மாவுருபித் தக்குணத்தி னாண்மை தானே''

என யூகிசிந்தாமணியில் தீ குற்றம் தன்னளவில் மிகுந்து உண்டாகும் குறிகுணங்கள் கூறப்பட்டுள்ளது. இதற்கு எதிருறையாக அதிமதுரம் வழங்க நோய் குணமாகும்.

11. மதம் , மூர்ச்சை : உறுதியுள்ள பித்தமது தோன்றில் வெப்பு
எழுங்கனவு மேய னைவு மயக்க மூர்ச்சை - சதகநாடி நூல்.

கூறிடவே பித்தமது மீறிற்றானால்
மேலான சோபமது விக்கல் மூர்ச்சை - அகத்தியர்

நாடி நூலிலும் பித்தம் தன்னளவில் மிகுந்து மதம், மூர்ச்சை நோய்கள் உண்டாகிறது. இந்நோய்க்கு எதிருறையாக அதிமதுரம் வழங்க குணமாகும்.

12. விடம் (சருவ விடம்) : சிறப்பான பித்தத்தில் வாதநாடி
முறைக்காய்வு விட வீக்கம் மூலவாய்வு - சதகநாடி நூல்

பித்தமும் வாதமும் தன்னளவில் மிகுந்து விடம் உண்டாகிறது. இந்நோய்க்கு எதிருறையாக அதிமதுரம் வழங்க குணமாகும்.

13. வாதசோணிதம் (அ) வாதசுரோணிதம் : இந்நோய் வாதம் தன்னளவில் மிகுந்து மூட்டுக்களைப் பற்றி வீக்கத்தை உண்டாக்கி அழல் குற்றத்தையும் தனக்குத் துணையாகக் கொண்டு நோயை உண்டாக்குவதால் இந்நோய்க்கு எதிருறையாக அதிமதுரம் வழங்க நோய் தீரும்.

14. காமாலை : காமியம் : ஆமேதான்யத்தி சுரம்பாண்டு சோகை
போமேதான் காமாலை பித்தவெட்டை - அகத்தியர் நாடி நூல்.

தீக்குற்றம் தன்னளவில் மிகுந்து மற்றக் குற்றங்களையும் தனக்குத் துணையாகக் கொண்டு இந்நோயை உண்டாக்கும். தீ குற்றம் வாதத்தைத் துணையாக கொண்டு காமாலை உண்டாக்கின் எதிருறையாக அதிமதுரம் வழங்க குணமாகும். மாறாக தீ குற்றம் கபத்தைத் துணையாகக் கொண்டு இந்நோயை உண்டாக்கின் அதிமதுரம் வழங்ககூடாது.

15. தாதுநட்டம் : ''பொருளான வாதத்தில் பித்தஞ் சேர்ந்து
சிவப்பு மலம் பிடித்தலுருந்தாது நட்டம்''

என சதகநாடி நூலில் வாதம் தன்னளவில் மிகுந்து பித்தத்தையும் துணையாகக் கொண்டு இந்நோயை உண்டாக்குகிறது எனவே எதிருறையாக அதிமதுரம் வழங்க இந்நோய் தீரும்.

16. குத்திருமல் : ''பித்தமே செனித்தாற் சூடு
பெலத்துடலு லரச் செய்யும்
பித்தமே மிகுந்தா லீளை
ருமலும் பெலத்து நிற்கும்''

என குணவாகட நாடி நூலில் பித்தக் குற்றம் தன்னளவில் மிகுந்து இருமல் நோயை உண்டாக்குவதால் இந்நோய்க்கு எதிருறையாக அதிமதுரம் வழங்க குணமாகும். மேலும் கபம் கேடடைந்து உண்டாகும் இருமலுக்கு இதனை வழங்கினால் நோய் அதிகப்படும்.

17. ஆசியங்கம் : யூகிவைத்திய சிந்தாமணியில், ஆசியங்கம் எனும் மேகநோய் வளிக்குற்றம் தன்னளவில் மிகுந்து நீரானது நெய்யின் மணமும் பிசுபிசுப்பும் கொண்டிருக்கும் இந்நோய்க்கு எதிருறையாக அதிமதுரம் வழங்க குணமாகும்.

18. இதழ்நோய் : உதட்டினைப் பற்றி வரும் பித்தரோகங்களுக்கு எதிருறையாக அதிமதுரம் வழங்க குணமாகும்.

19. குய்யப்புண் : அழல் குற்றம் தன்னளவில் மிகுந்து மேகநோயை உண்டாக்கி அதனைத் தொடர்ந்து குய்யத்தில் உண்டாகும் பித்தப் புண்களுக்கு எதிருறைாக அதிமதுரம் வழங்க நோய் குணமாகும்.

முடிவு :

சித்தர்கள் பஞ்சபூதம், சுவை, முக்குற்றம், நாடி அடிப்படையில் மருத்துவம் மேற்கொண்டதால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத காலத்திலும் மிகச் சிறப்பாக அனைத்து நோய்களையும் குணப்படுத்தியுள்ளனர். ஆனால் இந்நாளில் நாம் மேலோட்டமாக மருந்தின் குணத்தின் அடிப்படையில் மட்டுமே வைத்தியம் மேற்கொள்வதால் ஒரு மருந்து சிலருக்கு சிறப்பாகவும், சிலருக்கு சிறிது கூட நோயை குணப்படத்தாத நிலையும் உண்டாகிறது.

இந்த நவீன காலத்தில் அறிவியல் வல்லுநர்கள் அனைவரும் இந்திய முறை மருந்துகளை தரநிர்ணயம் செய்யவேண்டும் என பல ஆராய்ச்சிகள் மேற்கொண்டாலும் வெற்றியடையாமைக்கு காரணம் அவர்கள் பஞ்சபூத, முக்குற்ற, சுவை, வீரிய விபாக முறைப்படி மருந்தினை ஆராயதததுதான். எனவே நாம் அனைவரும் சித்தர்களின் வழிகாட்டுதெலின் படி நோயையும் கணித்து அதற்குரிய மருத்துவத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

அறிவியல் வல்லுநர்களின் உதவியுடன் சித்த மருத்துவ அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொண்டு அதன் மூலம் இத்தமிழ் மருத்தவத்தை பிரபஞ்ச மருத்துவமாக மாற்றும் வல்லமை நம் கைகளில் மட்டுமே உள்ளது.

SOME MEDICINAL AND AROMATIC PLANTS ABSTRACTS

Dr.L.SAMLAH, M.D. (S) POTHUMARUTHUVAM

ZINGIBER OFFICINALE :

Dried Rhizome of zingiber officinale is a potential source of hypoglycemic and hypo Lipidemic agents.

Clinical Studies :

Hypo glycemic and hypo lipidemic effects of rhizomes of Zingiber officinale were assessed on human subjects. Twenty mild NIDDM subjects and 20 mild hyper cholesterolemic subjects were treated with the dried rhizome powder of Z.officinale for 30 days. Suitable parameters were studies in blood and urine samples of the subjects along with the dietary pattern before and at the end of treatment period. A significant decrease in blood and urine sugar was noticed and the effect was more than that of oral hypo glycemic drug. Significant decrease in serum cholesterol, tryglycerides, LDL and VLDL cholesterol.

Significant increase in HDL cholesterol and decrease in artherogenic index were observed, indicating that dried rhizhome of Z. Officinale is a potential source of hypo glycemic and hypo lipidemic agents. Clinical observations revealed no adverse effects.

Eclipta alber and Exocoecaria Cochinchinensis

Remarkable Cyto toxicity was observed for chlorform and N-butanol extracts of under ground parts of Eclipta alba and Exocoecaria cochinchinensis displayed potent cell-line selective cyto toxicity.

MORINDA CITRIFOLIA

A crude ethanol extract and hexane fraction from Morinda citrifolia (Rubiaceae) showed anti tubercular activity.

The major constituents of the hexame fraction are E-phytol, cyclo artenol, stigma sterol, bito sito sterol, Campesta – 5, 7-22-trien-3-beta-oil and the keto steroids stigmasta –4-en-3-one and stigmasta-4-22-dien-3-one.

E-phytol, a mixture of two keto steroids and the epidoxy sterol derieved from Campesta – 5, 7-22-trien-3 beta-01 showed pronounced anti-tubercular activity.

CURCUMA LONGA

Chemical, anti-fungal and anti bacterial investigation of rhizome oil

GC-MS analysis of oil from rhi-

zomes of Curcuma Longa, showed presence of seven sesquiter penoids, comprising 97.6 percent of the oil.

Major constituents are – r – turmerone (51.7%) r – turmerol (11.9%), beta bisabolene (10.7%) and Zingeberene (10.2%). The oil has been found to possess strong toxic effect on several bacteria and is better anti fungal as compared to synthetic fungicides. The oil has no adverse effect.

TINOSPORA CORDIFOLIA :

The anti – bacterial activity of the aqeous, ethanol and chlorform extracts from the stems of Tinospora cordifolia was studied using disc diffusion method against Escherichia coli, Proteus Vulgaris Entero – bacter faecalis, Salmonella typhi (Gram – negative), staphylococcus aureus and Serratia marcescens (Gram – positive). Results suggest that the ethanali extract has significant anti-bacterial activity against tested bacteria.

SENGADAMBU

BARRINGTONIA ACUTANGULA

Family : Lerythiclaceae

Tamil Name : Sengadambu,
Kodappai, Adamyx

Fruit of Sengadambu shows anti – biotic activity against Escherichia coli and Micrococcus Pyogenesvav.

BETA VULGARIS

The root juice of beet root exhibited anti – Microbial activity against Salmonella typhi and Micrococcus pyogenes vav aureus the Root contains a tumour inhibiting factor.

BOERHAVIA DIFFUSA

Tamil: Mukkurattai Keerai.

Pharmacological studies have demonstrated that Mukkurattai possesses diuretic and anti – inflammatory activities.

A combination of these two activities makes Mukkurattai a very useful drug for the treatment of Inflammatory renal diseases and common clinical problems like Nephrotic Syndrome. It is particularly useful as maintenance drug. It is effective in cases of oedema and ascities resulting from early cirrohoris of the liver and chronic peritonitis.

Hypo – xanthine – 9 – L arabino furanoside present in the drug was found to lower Serum uric acid levels in experimental animals and also in humans.

Mukkurattai shows significant anti – fibrinolytic activity.

BRASSICA CAMPESTINS

Steam distillation of the peels yielded yellowish oily, anti-fungal substance Rapine.

In dilution of 1:1,00,000 rapine prevents the growth of bacteria, fungi and yeast.

பிரிவு

நீ என்னை பிரிந்து செல்லும்
அந்த இறுதியான நேரம்
என் இதயத்தை கல்லாக்கிகொள்வேன்
உன்னை மறப்பதற்காக அல்ல
உன்னை சிலையாக்கி வடித்து
வைத்துக்கொள்ள!

-ஸ்ரீ அபி

உணவே மருந்து! மருந்தே உணவு!!

ஜி.கே. சித்தா மூலிகை மருத்துவம் ஆராய்ச்சி மற்றும் அறக்கட்டளை

சிகிச்சை அளிக்கப்படும் நோய்கள்

- பக்க வாதம்
- குடற்புண்
- தோல் நோய்கள்
- கல்லடைப்பு
- இளம்பிள்ளைவாதம்
- இரைப்பு
- எல்லாவிதமான புற்றுநோய்கள்
- மாதவிடாய் கோளாறுகள்
- என்பு மற்றும் மூட்டுவலி
- இரத்த அழுத்தம்
- சர்க்கரை நோய்
- காமாலை
- மூலம்

சிறப்பு சிகிச்சைகள்

- இயன்முறைமருத்துவம்
- தொக்கணம்
- நவரக்கிழி
- பிழிச்சல், தாரா
- எண்ணெய்க் குளியல்
- என்பு முறிவு சிகிச்சை
- மூலிகை நீராவிக்குளியல்
- யோகா
- உடல் பருமன் குறைத்தல்

ஜி.கே. இயன்முறை மருத்துவம்

89 (பழைய எண்–302). பேப்பர் மில்ஸ் ரோடு,
பெரம்பூர், சென்னை–11
தொலைபேசி : 25571003, 25571098

எதிர்ப்பாற்றலில் 'உ ரை மாத்திரை'

க. பூங்குழலி
இறுதியாண்டு

'**இ**ன்றைய குழந்தைகளே நாளைய நாட்டின் மன்னர்கள்''. எனவே, அவர்களின் உடல்நிலை, நோய்களுக்கு அடிப்பணியாத எதிர்ப்பாற்றலோடு இருந்ததால் தான், அவர்களால் வளமான வாழ்வை பெற்று சமுதாயமும் முன்னேற முடியும். அந்த வகையில் இளங்குழந்தையிலிருந்தே எதிர்ப்பாற்றல் வழங்கவல்ல சித்தர்கள் வழங்கிய 'உரை மாத்திரை' என்னும் மருந்தை வழங்கி வர வளமான வாழ்வை பெறலாம். இவ்வரிய மருந்தின் மாண்பை விளக்கி, அது எவ்வாறு தோடம், மாந்தம், கணம் , கழிச்சல் முதலிய குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்களை போக்குன்றன் என்பதை விளக்குவது இக்கட்டுரை ஆகும்.

முதலில், இவ்வரிய மருந்தின் செய்முறையை பற்றி காண்போம்.

சேரும் சரக்குகள் :

அதிமதுரம்	-	25 கிராம்
ஓமம்	-	25 கிராம்
சுக்கு	-	25 கிராம்
வசம்பு சுட்ட கரி	-	20 கிராம்
கடுக்காய்	-	20 கிராம்
சிற்றரத்தை	-	10 கிராம்
அக்கிரகாரம்	-	10 கிராம்
மிளகு	-	10 கிராம்
திப்பிலி	-	10 கிராம்
பெருங்காயம்	-	10 கிராம்
மாசிக்காய்	-	10 கிராம்
பெருங்காயம்	-	10 கிராம்
மாசிக்காய்	-	10 கிராம்
சாதிக் காய்	-	10 கிராம்
பூண்டு	-	1

செய்முறை :

மேற்கண்ட சரக்குகளை வெற்றிலை சாறு (அ) துளசிசாறு விட்டு 6 மணிநேரம் நன்றாக அரைத்து, விரலளவு மாத்திரைகளாக செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும் :

கொடுக்கும் விதம் :

தாய்ப்பால் (அ) வெந்நீரில், 1 முதல் 6 சுற்றுவரை உரைத்து, குழந்தையின் நாவில் தடவவும்.

இனி, சேரும் சரக்குகளின் தன்மையை பற்றி காண்போம்.

அதிமதுரம்

குணபாடம் - மூலிகையில்,

''புத்திக்கு வித்தாகுஞ் சந்தாபந் தீர்க்கும்
புகைந்தெடுக்குஞ் சேட்டுமத்தைப்
பித்தரோகத்தை''
- ஏடு

இவ்வாறு கூறப்பட்டுள்ளது

'புத்திக்கு வித்தாகும்' - என்பதன் மூலம், குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு உதவுகின்றது என்பது தெரியவருகின்றது.

'புகைந்தெடுக்கும் சேட்டுமத்தை' போக்கும் என்பதன் மூலம், குழந்தைகளுக்கு உண்டாகும், கப நோய்களை போக்கும் என்பது தெரியவருகின்றது.

துளசி

அகத்தியர் குணவாகடத்தில்

''ஐயம் வயிறுளைச்சல் அத்திசுரம்
தாகமும்போம்
பையசர மாந்தம் பறக்குங்காண்''

என்று கூறப்பட்டுள்ளது.

நவீன ஆய்வுகளில்,

MycobacteriumTuberculi கிருமியை அழிக்கும் திறன் இருப்பதாக கண்டறிந்துள்ள னர். இதன் மூலம் அத்தி சுரமாகிய என்புகளை தாக்கும் காசநோயை எதிர்க்கும் திறன் இருப்பது பெறப்படுகின்றது.

மற்றும், டைபாய்டு சுரத்தை உண்டாக்கும் Salmonella Typhosa ஐ அழிக்கும் திறன் இருப்பதாகவும்,

கழிச்சலை உண்டாக்கும் E-Coli பாக்டீரியாவை அழிக்கும் திறன் இருப்பதாகவும் பெறப்படுகின்றது.

<u>கருத்துரை :</u>

மேற்கண்ட தன்மைகளோடு இருக்கும் உரைமாத்திரையை,

குழந்தைகளுக்கு உண்டாகும் கழிச்சல், கணம் முதலியவற்றிற்கு தாய்பாலில் (அ) வெந்நீரில் உரைத்து கொடுக்க குணமாகும்.

மாந்தம், பால் எதிரெடுத்தல் முதலிய வற்றிற்கு குழந்தைக்கு பால் கொடுத்தவுடன், தாய்ப்பாலில் இழைத்து கொடுக்க நல்ல செரிமானம் உண்டாகும்.

இவை மட்டுமன்றி குழந்தை பிறந்த 30 நாட்கள் கழித்து, குழந்தைக்கு தலைமுழுகும் போதெல்லாம் இதனை கொடுப்பதால், அம்மை, இளம்பிள்ளை வாதம், காசநோய், மஞ்சள் காமாலை முதலிய கொடிய நோய்களை எதிர்க்கும் திறன் உண்டாகின்றது. அதுமட்டு மன்றி எதிர்பாற்றலும் வளர்ச்சியு றுகின்றது.

தடுப்பூசிகள் பயன்படுத்தப்படாத அக்காலத்தில், குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்களை தடுப்பதற்கு, மக்கள், ‘உரை மாத்திரையை பயன்படுத்தினர்.

இன்று நவீன அறிவியலின் மூலம், அதில் சேரும் சரக்குகள், குழந்தைகளின் நோய்களுக்கு காரணமான கிருமிகளை அழிப்பதோடு மட்டுமின்றி எதிர்ப்பாற்ற லையும் மேம்படுத்துவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, உரை மாத்திரையை குழந்தை களுக்கு பயன் படுத்துவதை அனைவரும் நடைமுறைப்படுத்தினால் வருங்காலத்தில் நோயற்ற இளைஞர் சமுதாயத்தை உருவாக்க முடியும் என்டதில் ஐயமில்லை.

நவீன ஆய்வுகளின் படி :

பொதுவாக குழந்தைகளைதாக்கும், அம்மை நோயினை உண்டாக்கும் Varicella மற்றும் Measles வைரஸ்களை அழிக்கும் திறன் உள்ளதாகவும்,

இளம்பிள்ளை வாதத்தினை உண்டாக்கும் Polio வைரஸ்களை அழிக்கும் திறன் உள்ளதாகவும்,

மலேரியா சுரத்தை உண்டாக்கும் Plasmodium வைரஸை அழிக்கும் திறன் உள்ளதாகவும்,

கழிச்சலை உண்டாக்கும் Leishmania நுண்ணுயிர்களின் வளர்ச்சியை தடுப்பதாகவும்,

மஞ்சள் காமாலையை உண்டாக்கும், Hepatitis - B வைரஸை அழிக்கும் திறன் உள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், எதிர்பாற்றல் திறனில் முக்கிய காரணியான வெள்ளை அணுக்களின் உற்பத்தியையும் அதிகப்படுத்துகின்றது.

ஓமம்

அகத்தியர் குணவாகடத்தில் ,

“சீதசுரங் காசம் செரியாமந்தம் பொருமல்
பேதியிரைச் சல்கடுப்பு பேராமம் ”

முதலியவை குணமாகும் என்று கூறப்பட்டுள்ளது.

நவீன ஆய்வுகளின் படி,

கழிச்சலை உண்டாக்கும் E-Coli பாக்டீரியாவை அழிக்கும் திறன் உள்ளதாகவும்,

டைபாய்டு சுரத்தை உண்டாக்கும் Salmonella Typhosa நுண்ணுயிரியை அழிக்கும் திறன் உள்ளதாகவும்,

பல்வேறு தோடங்களை உண்டாக்கும், Micrococcus நுண்ணுயிரியை அழிக்கும் திறன் உள்ளதாகவும் கண்டிறியப்பட்டுள்ளது.

சுக்கு

அகத்தியர் குணவாகடத்தில்,

''சூலை மந்தம் நெஞ்செரிப்பு தோட மேப்பம் மழலை
மூலம் இரைப்பிருமல் மூக்குநீர்''

முதலியவை குணமாகும் என்று கூறப்பட்டுள்ளது.

நவீன ஆய்வுகளின் படி,

தோடங்களை உண்டாக்கும், Rhino வைரஸை அழிக்கும் திறன் உள்ளதாகவும்

எதிர்பாற்றல் திறனை மேம்படுத்து வதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

வசம்பு

குழந்தைகளுக்கு உண்டாகும் பல்வேறு நோய்களை குணமாக்குவதால் 'பிள்ளை மருந்து' என்று சிறப்பாக அழைக்கப்படுகின்றது.

குறப்பாக, மாந்தம், பால் எதிரெடுத்தல், கணம் கழிச்சல் முதலியவற்றை குணமாக்கும்.

நவீன ஆய்வுகளின் படி,

காசநோயை உண்டாக்கும் Mycobacterium Tuberculei யின் வளர்ச்சியை கட்டுபடுத்தும் திறன் உள்ளதாகவும்,

கழிச்சலை உண்டாக்கும் E-Coli பாக்டீரியாவை அழிக்கும் திறன் உள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், மூச்சுக்குழாய் மற்றும் சிறுகுடலில் தசையில் ஏற்படும் வளப்பை நோக்கும் குணம் உள்ளதாக கண்டறியப்பட்டு ள்ளது. இதன் மூலம் சுவாசப்பாதையில் உண்டாகும் நோய்களையும், கழிச்சலின் போது உண்டாகும் வயிற்று வலியையும் போக்கும் குணம் உள்ளது தெரியவருகிறது.

குழந்தைகளுக்கு உண்டாகும் பேதி, சுவாச காசம், இவைகளைப் போக்கும் என்று அறி யப்படுகின்றது.

நவீன ஆய்வுகளின் மூலம்,

சுவாச தோடத்தை உண்டாக்கும் Streptococcus மற்றும் Micrococcus பாக்டீரியாக் களை அழிக்கும் திறன் இருப்பதாகவும்,

கல்லீரலுக்கு வலுவூட்டும் தன்மை இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

பூண்டு

அகத்தியர் குணவாகடத்தில் ,

'' மன்னிவரு நீர்க்கோவை வன்சீதம்''

போகும் எனவும்,

தேரன் காப்பியத்தில்,

''புப்பச நோய் கெடும்''

எனவும் கூறப்பட்டுள்ளது.

நவீன ஆய்வுகளின் மூலம், காச நோயை உண்டாக்கும், கிருமிகளை அழிக்கும் திறன் இருப்பதாகவும்,

கழிச்சலை 'உண்டாக்கும், E-Coli மற்றும் Shigella Dysentriae ஆகிய கிருமிகளை அழிக்கும் திறன் இருப்பதாகவும்.

டைபாய்டு சுரத்தை உண்டாக்கும், Salmonella Typhosa கிருமியை அழிக்கும் திறன் உள்ளதாகவும் கண்டறியப் பட்டுள்ளது.

வெற்றிலை

அகத்தியர் குணவாகடத்தில்,

''ஐயம் அறுங்காண்'' என்றும்

''மாந்தமொடு - நாட்டிற் பரிய குரல் கம்மல் ''

இவை போம் என்றும் கூறப்பட்டுள்ளதின் மூலம், குழந்தைகளுக்கு உண்டாகும், கபநோய் கள் மற்றும் மாந்தம் ஆகியவை போகும் என்று அறியப்படுகின்றது.

நவீன ஆய்வுகளின் மூலம்,

காசநோயை உண்டாக்கும் Mycobacterium Tuberculi பாக்டீரியாவை அழிக்கும் திறன் உள்ளதாகவும்,

காலராவை உண்டாக்கும், Vibrio Cholerae வை அழிக்கும் திறன் இருப்பதாகவும்,

கழிச்சலை உண்டாக்கும் E-Coli, Shigella Dysenteriae ஆகியவற்றை அழிக்கும் திறன் இருப்பதாகவும்,

சுவாச தோடத்தை உண்டாக்கும் Streptococcus மற்றும் Micrococcus பாக்டீரி யாக்களை அழிக்கும் திறன் இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

கடுக்காய்

கடுக்காயின் சிறப்பு :

"கடுக்காயுந் தாயும் கருதிலொன் றென்றாலும்
கடுக்காய்த் தாய்க்கதிகங் காண்நீ -
கடுக்காய்நோய்
ஓட்டி யுடற்தேற்றும் உற்றவன்னை யோ
சுவைகள்
ஊட்டியுடற் றேற்று முவந்து"

(அ.கு.)

இவ்வாறு, தாயை விட சிறப்பு வாய்ந்தது கடுக்காய் என்று கடுக்காயின் மாண்பு கூறப் பட்டுள்ளது. இதன் மூலம் குழந்தை களுக்கு உண்டாகும் பல்வேறு நோய்களை போக்கும் திறன் வாய்ந்தது என்று அறியப்படுகிறது.

நவீன ஆய்வுகளின் மூலம்,

பலவிதமான பாக்டீரியாக்களை அழிக்கும் திறன் உள்ளதாக, கண்டறியப்பட்டுள்ளது.

சுவாசக் குழாய் தசையின் உண்டாகும் வலிப்பை போக்குகின்றது என்று கண்டறியப் பட்டுள்ளது. இதன் மூலம், சுவாசப் பாதையில் உண்டாகும் நோய்களில், சுவாசத் தடையை நோக்கி, நல்ல சுவாசத்தை உண்டாக்குகிறது.

மேலும், நோய் எதிர்ப்பாற்றல் திறனை மேம்படுத்துவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

சிற்றரத்தை

மூலிகை குணபாடத்தில்,

"அரத்தையின் குணத்தைக் கேளிர் அக்காஞ்
சந்தி போக்கும்
உரத்தொரு இருமல் மாற்றும் ஓங்கிய உதிரம்
போக்கும்
இரைத்திடும் காச மெட்டும் விஞ்சிய
விஷயமும் தீரும்
சுரத்தையும் நீக்கு மென்று சொன்னது வேத
நூலே"

(ஏடு)

குழந்தைகளுக்கு உண்டாகும் இருமல், காசம், சயம், சுரம் முதலியவை குணமாகும் என்று கூறப்பட்டுள்ளது.

நவீன ஆய்வுகளின் படி,

காச நோயை உண்டாக்கும் Mycobacterium Tuberculi இன் வளர்ச்சியை தடுப்பதாகவும்,

பல்வேறு பாக்டீரியா நுண்ணுயிர்களை அழிக்கும் திறன் உள்ளதாகவும்,

சுவாச பாதை நோய்களில் உண்டாகும் சுவாச குழாய் இறுக்கத்தைத் தளர்த்தி எளிதான சுவாசம் உண்டாக வழிவகுப்பதாகவும் அறியப்பட்டுள்ளது.

அக்கிரகாரம்

"சுக்குமா ரோசிக கங்க ளடிநவ தோஷம்
கோகும்"

(ஏடு)

என்று கூறப்பட்டுள்ளதின் மூலம், குழந்தை களுக்கு உண்டாகும் நவ தோடங்களையும் போக்கும் என்பது தெரியவருகின்றது.

நவின ஆய்வுகளின் மூலம்,

நவ தோடங்களில் ஒன்றான சுரதோடத்தை உண்டாக்கும் "டைபாய்டு" கிருமியை அழிக்கும் திறன உள்ளது கண்டறியப் பட்டுள்ளது.

மிளகு

அகத்தியர் குணவாகடத்தில் ,

"சீதசுரம் பாண்டு சிலேத்மங் கிராணி குன்மம் "

இவை போகும் என்றும்,

"காசமிவை நாசம் கறிமிளகினால் "

என்றும் கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம், மிளகினால் குழந்தைகளுக்கு உண்டாகும், சீதசுரம், கிராணி, காசம் இவை போகும் என்று எறியப்படுகின்றது.

நவீன ஆய்வுகளின் மூலம்,

கழிச்சலை உண்டாக்கும், E-Coli மற்றும் Bacillus பாக்டீரியாவை அழிக்கும் திறன் இருப்பதாகவும்,

சுவாச தோடத்தை உண்டாக்கும், Micrococcus பாக்டீரியாவை அழிக்கும் திறன் இருப்பதாகவும் கண்டறியப் பட்டுள்ளது.

மேலும், கிருமிகளை அழிக்கும் நிகழ்வுகளில் ஒன்றான **'Phagocytic activity'** இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் எவ்வகை கிருமிகளையும் எதிர்க்கும் எதிர்பாற்றல் இருப்பதாக அறியப்படுகின்றது.

திப்பிலி

அகத்தியர் குணவாகடத்தில் ,

"ஈளை யிரும லிரைப்புப் பசப்பிணிகள்"

போகும் என்று கூறப்பட்டுள்ளதின் மூலம், குழந்தைகளுக்கு சுவாசயத்தில் உண்டாகும் ஈளை, இருமல், இரைப்பு இவை போகும் என்று அறியப்படுகிறது.

நவீன ஆய்வுகளின் மூலம்,

சுவாச சய நோய்களில் உண்டாகும், சுவாச குழாய் இறுக்கத்தை போக்குவதாக கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம், ஈளை, இருமல், இரைப்பு இவைகளில் உண்டாகும் கடின சுவாசத்தை போக்கி, எளிதான சுவாசம் உண்டாக ஏதுவாகின்றது.

மேலும், காச நோயை உண்டாக்கும், Mycobacterium Tuberculi பாக்டீரியாவை அழிக்கும் திறன் உள்ளதாகவும்,

கழிச்சலை உண்டாக்கும் E-Coli பாக்டீரியாவை அழிக்கும் திறன் உள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

பெருங்காயம்

தேரையா குணவாகடத்தில் ,

"மந்தம் வாதம் உதாவர்த்தம் அல்குல் நோய்"

இவை போகும் என்று கூறப்பட்டுள்ளதின் மூலம், குழந்தைகளுக்கும் உண்டாகும் மந்தத்தினை சரி செய்கின்றது என்பது அறியப்படுகின்றது.

நவீன ஆய்வுகளின் மூலம்,

இதற்கு இரைக்குடலை தூண்டக் கூடிய தன்மை இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் மந்தத்தினை போக்கி, நல்ல செரிமானத்தை உண்டாக்குகின்றது.

மாசிக்காய்

அகத்தியர் குணவாகடத்தில்,

"தக்கதொரு பாலர் கண நோய் போக்கும் "

என்று கூறப்பட்டுள்ளது.

நவீன ஆய்வுகளில்,

இதற்கு துவர்ப்பி செய்கை இருப்பதால் கழிச்சலை தடுக்கின்றது என்று கண்டறியப் பட்டுள்ளது.

'சோதனைக் குழாயின்' சாதனையாளர்

அணி ஜசுமின் சொப்னா
மூன்றாமாண்டு

சோதனை குழாய் முறையில் 1980ல் கருமுட்டையை, விந்து சந்தித்து கருவடைவது பெரிய சாதனையாக கருதப்பட்டது. தொடர்ந்து நடந்த ஆராய்ச்சிகளில் 'இக்சி (ICSI) என்ற முறையில் விந்தணுவை கரு முட்டையின் உள்செலுத்தி கருவடையச் செய்யப்பட்டது 1990' ஆண்டின் சாதனையாகும்.

'இக்சி' என்ற முறையின் ஆராய்ச்சியில் இன்று விஞ்ஞான உலகம் சிகரத்தை நெருங்கிவிட்டது. ஆனால், 'இக்சி' போன்ற செயற்கை கருத்தரிப்பு முறையை பல நூறு ஆண்டுகள் முன்பே தீர்க்கதரிசியான திருமூலர் தம் பாடலில் கூறியுள்ளார்.

'குயிற் குஞ்சு முட்டையை காக்கைக் கூட்டிட்டால்
அயிற்ப்பின்றிகாக்கை வளர்ப்பது போல
இயக்கில்லை போக்கில்லை ஏனென்பதில்லை
மயக்கத்தில் காக்கை வளர்க்கின்றவாறே'

- *திருமந்திரம்*

பொருள் : காகமானது, தன் இனமில்லாது (இரண்டாம் தந்தரிம்) வேற்று இனத்தின் முட்டையை, வளர்க்கின்றது. ஆனால் இப்பாடலின் கருத்தை உற்று நோக்கினால்,

திருமூலர், இன்றைய நூற்றாண்டின் அரிய கண்டுபிடிப்புக்கு பலநூற்றாண்டுகள் முன்பே பாதை அமைத்தது தெளிவாகும்.

நவீன முறைப்படி 'செயற்கை கருத்தரிப்பு' (இக்சி) என்ற முயற்சியில், பெண்ணின் கருமுட்டை 'காத்திருப்பதை' தவிர வேறு ஒன்று செய்வதில்லை. ஆண் விந்துவே நீந்தி பெண் முட்டையை 'உடைத்து' உள்ளே செல்ல வேண்டும். இந்த இயற்கை விந்தையை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து இந்த நூற்றாண்டின் மத்தியில்தான் ஆனால் திருமூலர்,

'பாய்கின்ற வாயு மாதர்க்கில்லை பார்க்கிலே'
என்றும்; விந்துவை பற்றி கூறும்போது,
உதயத்தில் விந்து ஓங்கு குண்டலியும்
உதயக் குடிலில் வயிற்தவம் ஒன்பான்
விதியிற் பிரமாதிகள் மிகு
சக்தி கதியாற் கரணங் கலைவைக் கரியே'

என்று அருமையாக கூறுகிறார்.

பொருள் : கரு உற்பத்தி காலத்தில், விந்துவில் 'உயிர்தலை' செய்யும் குண்டலியும், விந்துவின் ஒன்பது பேதங்களும், அவற்றின் முறையே அயன் முதலிய ஒன்பது நிலைகளும், கரணங்கள், கலைகள், வைகரி முதலியன தோன்றும்.

இப்பொழுது நவீன மருத்துவத்தின் முறையில் CASa (Computer assisted sperm Analyses) மூலம் விந்துவை ஆராயலாம். இதில் முக்கிய அம்சங்களாக கருதப்பட்டது.

1. விந்துவின் தலை பாகம் Nucleus
2. Acrosome & Acrosomal cap.
3. Centrole (கழுத்தின் நடுப்பகுதி)
4. Sperm Count (விந்துவின் அளவு)

'Sperm Count' பற்றி கூறுமிடத்து, திருமூலர் 'அழிகின்ற விந்துவின் அளவையறியார் சுழிகிறை தன்னையும் காக்கலுந் தேரார்'

என்று அழகாக விளக்கியுள்ளார்.

'அழிகின்ற விந்து' - என்றால் 'விந்து வெளிப்பட்டு 4 முதல் 6 மணி நேரம் மட்டுமே உயிருடன் இருக்கும் என்று பொருள்.

1. Centrole : ஆணின் 'சென்டிரியோல்' தான் பெண்ணின் சினை முட்டையை இயக்குகிறது. இந்த Centrole எனப்படும் ஆண் அணு (Sperm) வின் பாகம், ஆங்கிலத்தில் 'Black box of pregnancy' எனக் கூறப்பட்டுள்ளது.

2. Acrosoma cap - இது கரு முட்டையினுள் செல்ல வேண்டிய சரியான பகுதியை கண்டுபிடித்து, துளையிட்டு Fertilization ஆண் விந்துவை, பெண் முட்டையுடன் இணைக்கின்றது. இதனை முன் கூறிய பாடலில் (உயிர்தலை' செய்யும் குண்டலி என்றார் திருமூலர்.

3. Nucleui - இது ஆண் விந்து அணுவின் மையப் பகுதியை குறிக்கும். இது பெண் Nucleui முட்டையின் உடன் சேரும்போது 'கரு' (Zygote) உருவாயிற்று. இதனை.

'ஒழிந்த நுதல் உள்ளே ஒளித்ததே'

என்ற வரிகளால் தெளிவு படுத்துகிறார் திருமூலர்.

இவ்வாறு சோதனை குழாயில் செயற்கையாக உருவான 'கரு' வை கருப்பையின் உட் செலுத்த கூரிய ஊசி அல்லது கதிர்வீச்சு பயன்படுத்தப்பட்டது.

பின், இவ்வாறு செலுத்தப்பட்ட 'கரு' வினை, கருப்பையில் வளர்ப்பதை குறித்து, கூறுமிடத்து

'குயிற் குஞ்சு முட்டையை காக்கை கூட்டிட்டால்'
என்றும்,
'உன்னிய கர்ப்பக் குழியாம் வெளியிலே
பண்ணிய நாதம் பகர்ந்த பிருதுவி
வன்னியும் வாயுவும் மாயுரும் சுக்கிலம்
மன்னிய சமனாய் வளர்க்கு முதகமே'

என்று திருமூலர் கூறுகிறார்

-திருமந்திரம்
2-ஆம் தந்திரம்.

பொருள் :

'கர்ப்பக்குழி' என்பது கருப்பை, இது 'ஆகாய' கூறாகையால், கருவுக்கு இடமளிக்கும் செயலை புரிகின்றது.

'நாதம்' எனப்படுவது 'மண்' கூறாகையால், கருவை தாங்கி, வளர்க்க உதவுகின்றது.

'சமனாய் வளர்க்கு முதகமே' என்கையில்,

உதகமான நீர் யாவற்றையும் செழிப்பாக வளரச் செய்யும் என்று புலனாகிறது.

இப்பாடலில் மூலமே

'ஐந்தினுள் ஆணது பிண்டமே'

என்ற கருத்தினை நிலைப்படுத்துகிறார், திருமூலர்.

இவ்வாறு இன்றைய நவீன, நூதனமான கண்டுபிடிப்புகளை அன்றே நடத்தி இம்முயற்சியில் வெற்றிக்கு வழியும் வகுத்துள்ளார், திருமூலர். ஆனால், இப்பாடல்களை ஆராய்ந்து அவற்றின் பொருள் அறிதல் எளிதான காரியம் அன்று. அகச் சோதனை மனிதனை சாதனையாளராக ஆக்குகிறது. எனவே, தொடர்ந்து நின்று நான் என்னை சோதிக்கும்போது கடந்து நின்று அவ்வழி காட்டுகிறான் பரமன்' என்ற கூற்றின்படி, மனித முயற்சிகளை ஊக்குவிக்கவும் வெற்றியை வரமளிக்கவும் 'ஞானம்', மட்டுமே அடித்தளமாக அமைகின்றது.

புத்தகம்

உன்னை நான் வெறும் வெள்ளைத் தாளில்
அச்சிடப்பட்ட காகிதங்களாய்
நினைத்ததில்லை
காலத்தையும் விஞ்சி நிற்கிற
கருத்து மணிகளாய்
நினைக்கிறேன்

இராமகிருட்டிணன்
மூன்றாம் ஆண்டு

எனது பழைய காலைப்பொழுது

தலைமாட்டில் கேட்கும் சிட்டுக்குருவி சத்தம்
ஓயாமல் கேட்டுக் கொண்டிருக்கும் சேவலின் கூவல்
எங்கேயோ தூரத்தில் கேட்கும் குயிலின் கீதம்
ஆதவனை கட்டியணைக்க காத்திருக்கும் புல்நுனி பனித்துளி
கொள்ளைப்புறம் மணக்கும் மல்லிகை
வெள்ளைப் பந்தாக காட்சியளிக்கும் தும்பைச் செடிகள்
புது மலர்ச்சியுடன் காணும் அவரைப்பந்தல்
பனை ஓலை நுனியில் ஆடும் தூக்கனாங்குருவிக்கு
நுனிமட்டும் ஆட அடி ஆடாமல் நிற்கும் தென்னை
ஆயிரம் ஆதவனாய் மலரும் குளத்து தாமரைகள்
மிதமான குளிர்ச்சியுடன் காணும்மணல் பாதை
ஈர வாசலில் கலையுடன் போடும் அழகு கோலம்
இலேசாகய் மெழுகு கோலமிட்ட புகையும் அடுப்பு
தாயிடம் பாலருந்தும் கன்றுகுட்டி
காளைகளுடன் ஏர் சுமந்து செல்லும் வயதான காளையர்கள்
ஆங்காங்கே அரிதாய் கேட்கும் மனித குரல்கள்
முகமலர்ச்சியுடன் எழுப்பிவிடும் அம்மா
தேனீர் அருந்த அழைக்கும் அப்பா
மிதிவண்டி துடைக்கும் தாத்தா.
முக்காடுடன் குரும்பை, தேங்காய் எடுத்துவரும் பாட்டி
எட்டி உதைக்கும் தம்பி
சமாதானம் செய்யும் அண்ணன்
எங்களை வரவேற்கக் காத்திருக்கும் புது மலர்கள்
காலைச் சுற்றி சுற்றி வரும் நாய்
இவையனைத்தையும் யதார்த்தமாய் இருந்தது அப்போது
ஏங்கித் தவிக்கிறேன் இப்போது...

பசுமையான நினைவுகளுடன்
பனிமொழி
மூன்றாமாண்டு

எதிரெது காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய் — குறள்
இளைய சக்தி
இணையற்ற சக்தி
எய்ட்ஸ் இல்லா இந்தியாவை உருவாக்குவோம்!
இணைவோம் அனைவரும்
எய்ட்ஸினால் பாதிக்கப்பட்டோர்களுக்கு
தோள் கொடுப்போம்! துணை நிற்போம்!!
தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்.

தாய்ப்பாலின் மகத்துவம்

வெ. நர்மதா - பி. ஸ்ரீதேவி
இறுதியாண்டு

முன்னுரை :

''தந்த பசிதனையறிந்து முளையமுது தந்து முதுகு தடவிய தாயார்'' என அருணகிரி நாதர், குழந்தைக்குப் பால் தரும் முறையுடன் தாயன்பினை இணைத்துக 'காட்டியிருப்பது எண்ணி பார்க்க வேண்டிய ஒன்று.

ஆனால் இன்றைய தாய்மார்கள் பாலூட்டாமையை நாகரிகம் என்று எண்ணி அநாகரிகமாக தன் பிஞ்சுக்கு பால் ஊட்டாமல் இருக்கின்றார்கள். இத் தாய்மார்களோ பண்டைய பழக்க வழக்கங்களை மறந்து தன் வனப்பை காத்துக் கொள்ள பிஞ்சுகளை தவிக்க விடுகின்றார்கள்.

பாலூட்டும் தாய்:

தாய் பால் என்று ''இயற்கை சீதனம்'' தாய் - குழந்தை பிணைப்பின் திரவப் பாலம். தாய்ப்பால் தரும் பழக்கம் நிலைத்து நிற்பதால் மட்டுமே, நமது இனம் சுமார் ஒரு கோடி ஆண்டுகளாக பாதுகாக்கப்படுகிறது. பண்டைக் காலத்தில் தாய்மார்கள் குழந்தைகளுக்கு தன்பாலைத் தவிர வேறு உணவை ஊட்டியதாக தெரியவில்லை. வயிற்றுக்குள் இருக்கும் குழந்தை வாயில்விரல் போட்டு சப்புவதற்கு பழகி விடுகிறது. பிறந்த குழந்தை மார்பில் பால் குடிப்பது என்பது இயற்கையில் உந்துதலிலேயே ஏற்பட்டு விடும்.

இவ்வாறு பிறக்கும் போதே உறிஞ்சும் சக்தி கொண்ட சிசுவை தாய்மார்கள் ஏமாற்றலாமா - கூடாது.

குழந்தை தன் தாயிடம் பால் குடிக்கும்போது அதற்கு அரவணைப்பு, தட்ப வெப்ப பாதுகாப்பு மற்றும் அன்பின் பிணைப்பு கிடைக்கின்றது.

குழந்தை தாயின் மார்பில் உறிஞ்சும் போது நாளமில்லாச் சுரப்பிகளின் நாயகனாய் திகழும், பிட்யூட்டரியின் பிடரியைச் சுண்டி இழுத்துப் புரோலாக்டின் என்ற உட்சுரப்பு நீரினை உற்பத்தி செய்கிறது. அது மார்பில் உள்ள சுரப்பிகளை தூண்டுவதுடன் தாயின் கருப்பையும் சுருங்கச் செய்யும்.

பங்கியின் விதி:

பிறந்த குழந்தையின் எடை எப்பொழுது இரட்டிப்பாகிறதோ, அதனைப் பொறுத்துத் தாய்பால் புரதச் சத்தும் அதிகரிக்கும், மனிதனின் பிறந்த குழந்தை 3 கிலோவிலிருந்து 6 கிலோவாக, 5 மாதங்களாகும் என்றால் அதன் புரதச் சத்த 1.2 கிலோ விழுக்காடுதான்.

மூளை வளர்ச்சியும் தாய் பாலும்:

எத்தனை சக்தி மற்ற பாலுண்ணும் மிருகங்களிடம் இருந்தாலும் மனிதனின் மூளை நரம்பியல் மண்டலம் வளர்ச்சியுற்றிருப்பதுதான் அவனை மிகவும் உயர்ந்தவனாக காட்டுகிறது.

இந்த மூளை நரம்பு வளர்ச்சி பெரும்பாலும் புரதச் சத்தினை விடக் கொழுப்புச் சத்தினை நம்பியுள்ளது.

சதை வளர்ச்சிக்கு புரதச் சத்தும், நரம்பு வளர்ச்சிக்கு கொழுப்புச் சத்தும் இன்றியமையாதவை. பெரும்பாலும் மூளை நரம்பு அணுக்கள் பிறக்கும் பொழுதே வளர்ச்சியடைந்து 20 முதல் 30 சதவிகிதம் மட்டும் பிறந்த சில மாதங்களில் வளர்ச்சியடைகின்றன.

மூளையின் நரம்பணுக்களின் எண்ணிக்கை வளர்ச்சியடைவதைவிட மயலின் என்ற பாதுகாப்பு கொழுப்பு நரம்பினைச் சுற்றி அமைவதுதான் பெரும்பாலும் பிறந்த பின் நடக்கும் நிகழ்ச்சி அதற்கு 70 சதவிகிதம் கொழுப்பு தேவைப்படுகிறது.

ஆனால் முழுமையான வளர்ச்சி என்பது மற்றும் மூளை வளர்ச்சி என்பதனால் பதாச் சத்தும் கொழுப்புச் சத்தும் சரியான விகிதத்தில் கிடைத்தால் தான் வளர்ச்சி காலம் சமன் நிலையில் அமையும் மனிதனின் தாய்பாலில் 1 சதவிகிதம் புரத சத்தும்,

3.8 சதவிகிம் கொழுப்பும் 7 சதவிகிதம் இனிபபுச் சத்தும் உள்ளன.

ஆனால் பசும்பாலில் 3.3. சதவிகிதம் புரதமும் 4.8 சதவிகிதம் இனிப்பு சதவிகிதம் 3.8 சதவிகிதம் கொழுப்பு சத்தும் உள்ளது.

தாய் குழந்தைக்கு மட்டுமன்று ஒரு நாட்டிற்கே ஒரு பொருளாதாரக் கருவூலம் தாய்பால் குழந்தைகளை நோய்களிலிருந்து காப்பதுடன் குடும்பச் செலவையும் குறைக்கின்றது.

மூன்று மாதம் குழந்தைக்கு பால் மாவு வாங்கினால் மாதத்திற்கு ரூ.450/- ஆகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. நம் நாட்டில் தாய்பால் மூலம் ரூ.6500 கோடியாகும். இந்தக் குப்பிப் பால்களால் நேரும் வயிற்றுப் போக்கைத் தடுக்க நேரும் செலவு ரூ.176 கோடியாகும். மகப்பேற்றுத்தடுப்பை கணக்கிட்டால் ரூ.495 கோடி செலவாகும்.

இவ்வாறு புட்டிப்பாலை நீக்கித் தாய்ப்பாலை நடைமுறைக்குக் கொண்டு வருவதால் ஆண்டிற்கு ரூ.7191 கோடி வீண் செலவு தவிர்க்கப்பட்டுச் சேமிப்பாகின்றது.

தாய்ப்பால் ஒரு தேசிய ஒரு தேசியச் சொத்து, அதனை குழந்தைக்குத் தரமாமல் இருப்பது நாட்டிற்கு செய்யும் தீங்கு ஆகும்.

முலைப்பாலின் பொது குணம்

"தனியமென்றோதிச் சருவதோ ஷங்கள் போம்
உன்னிய தாப பொழியுங்காண் -சந்தியொடு
வாதசுரம் பித்துசுரம் வன்கபச்சு ரந்தணியுங்
கோதில்வன் மையுண்டாங் கூறு"

தாய்பாபாலானது ஏழுவகைத் தோடங்கள், வெப்பம், சந்நிபாதம் காமருந்திற்காக - திரு நிலத்துள் நோயணுகாச் செய்ய நுடக்கிடையார் தம்முலைப் பால் தீய முத்தோஷம் போக்குஞ்சேர்.

தன் செந்நிற இரத்தத்தை வெள்ளை இரத்தமாக்கி வழங்குகிறாள் தாய். அறுசுவை ஊட்டி உடல் தேற்று முன்னே, தன் பாலால் நோயணுகாது காக்க தொண்டாற்றுகிறாள் தாய்.

தழைக்கட்டும் தாய்மை!

வெல்லட்டும் நோயில்லா நெறி!

VIRTUES OF BREAST FEEDING

Baby :-

¨ Milk is no only species specific it is baby specific.

¨ Ensure bonding optimal physical and mental growth

¨ Breast fed babies hae 81Q points higher than formula fed babies.

¨ It enchances child survival by reducing risk of death due to diarhoea by the 14 times ARI by 4 times and other infection by 3 times.

¨ The risk of allergic disorders is reduced.

¨ The take of vaccine is better in breast fed babies.

¨ There is reduced risk of diabetes mellitus obesity, hypertension and coronary artery disease in adult life.

Mother

1. It promotes spacing of birth.

2. The mother who breast fed their babies are likely to maintain their figure better and have a reduced risk of breask and overian cancer. A woman who has breast fed her baby seem to have a lower risk of developing breast cancer during pre-monopausal years. The recent stud-

ies shown risk drop by 11% ever for woman who lactate for 4 to 6 month.

This reduction held true even when there was a family history of breast cancer.

Some studies find that location has a preventive effect on ovarian cancer of ovaries was 60% more common among women who had never located.

- Lactating has an interesting effect on the mother's bone's Thickness and strength of bones seem to decrease during the milk - producing month.

because the some calcium from the bones shows better density than those of non-nursing woman. It appears that with each child breast fed there is improved - Remineralisation of mother bones, including the spine. And that translates into a reduced risk of serious problems like fractured hip (or) pelvis in latter years.

- A study reported in the "Journal of American diet Association" found that one month after delivery mother who were exclusively (or) Partially breast feeding their child had a greater reduction in hip circumference and were closer to their pre pregnancy weight that woman who were bottle feeding.

A WHO conference on this subject concluded that a woman who is breast feeding on demand for six months and has not menstructed has a 2% chance of becoming pregnant. This 'success rate' is equal to artificial birth control device.

Colosterm :-

It is a valuable secretion from the breast of mother, who has just delivered a child.

It is a special milk secreted for few days. It is yellowish and its protein content vit-A is very high.

Containing antibodies vitamins and minerals antibodies have systemic as wells as local protective function.

Promotes mautration of intestinal muasa.

Mature Milk (with in 2 weeks of birth)

Thin and watery with tingeblue. Fore milk is rich in proteins, Lactose, Vitamins, Minerals and Water.

Hind milk (at the end of the feed) has more fat and is rich in energy.

Composition :-

Proteins :

Antibacterial effects

For the initial resistance build up of the infant. Till its own immune system starts functioning properly.

It maintains the metabolism taking plays in the body.

It is the source of non-allergic proteins for the infants.

Fats:-

Main function is to supply calories.

காதல்

பெட்டகமாய் உன்நினைவு
சுமந்து கொண்டு
ஒட்டகமாய் பயணிக்கிறேன்
சோலைவனத்தை உன்னைதவிர
இனி யார்தந்தாலும் அது
எனக்கு பாலைவனமே !

வி. கி மகாலட்சுமி
இறுதியாண்டு

சுக்கிலத் தம்பன மாத்திரை

க. லதா - ம. ஜோதி
இறுதியாண்டு

முன்னுரை :

உடற்தாதுக்களில் ஏழாவது தாதுவான சுக்கிலம் கரு உற்பத்திக்கு முழு முதல் ஆதாரமாய் நிற்பதாகும். இன்றைய காலகட்டத்தில், சுக்கிலம் கேடு அடைவதால் சொப்பணக்கலிதம் எனப்படும் தோடநிலை பரவலாகக் காணப்படுகிறது. இக்குறை பாட்டினால் இன்றைய இளைஞர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். அவர்களின் இந்நிலையைப் போக்கும் வகையில் காஞ்சிபுரத்தில் கண்டறியப்பட்ட ஏட்டிலிருந்து, சொப்பனக்கலிதத்தால் ஏற்படும் விந்து நட்டத்தை மருந்தாக் இந்த சுக்கிலத்தம்பன மாத்திரையைக் கண்டறிந் தோம். இம்மருந்தில் சேர்க்கப்பட்டுள்ள தனிச்சரக்குகளின் குணத்தையும், மாண்பை யும் நமது தத்துவத்தின் அடிப்படையில் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தேவையான சரக்குகள் : நிலை நிறுத்த (அ) பெருக்க

ஒரு முழுமையான மருந்தை செய்து முடிக்க வேண்டுமெனில் முதன்மை, இணை, துணை மருந்துகள் என்ற அடிப்படையில் சரக்குகளைச் சேர்க்க வேண்டும். இவ்வடிப்படையில் சேரும் சரக்குகளாவன :

வெடிக்காத தென்னங்குறும்பை - 100 கி - முதன்மை மருந்து

வெள்ளெருக்கும் பூ	-	100 கி இணை மருந்து
பச்சைப்பாக்கு	-	25 கி இணை மருந்து
சாதிக்காய்	-	25 கி துணை மருந்து
சாதிப்பத்திரி	-	25 கி துணை மருந்து
இலவங்கம்	-	25 கி துணை மருந்து

மேற்கூறிய சரக்குகளை கருவேலம்பிஞ்சு சாறு விட்டு ஒரு சரமம் அரைத்துப் பட்டாணி அளவு மாத்திரைகளாக உருட்டிக் கொள்ளல் வேண்டும்.

அளவு : 1 மாத்திரை (இரவு படுப்பதற்கு முன்)
வாரத்திற்கு 2 நாள்

முதன்மை மருந்தாக சேரும் தென்னங்குறும்பையின் பண்புகள்

துவர்ப்புச் சுவையுடைய தென்னங் குறும்பை தட்பவீரியத்தோடு உரமாக்கி செய்கையினையும் தன்னகத்தே கொண்டு, கீழ்க்கண்ட குணத்தை கொண்டுள்ளது.

மேகம் அகக் கொதிப்பு வீறுவி ரத்த பித்தம்

வேக அசிர்க்கர நோய் வீழ பிரமி - தேகத்தில்

வின்னம் பாலிக்கும் விடபாகம் போகவென்றால்

தென்னம்பாளைப் பூவைத் தின்.

இணை மருந்தாக சேரும் வெள்ளெருக்கம்பூவின் பண்புகள்

கைப்புச் சுவையுடைய வெள்ளெ ருக்கும் பூ வெப்ப வீரியத்தோடு, உரமாக்கி செய்கையையும் தன்னகத்தேக் கொண்டு, ஆண்மையுண்டாக்கும் குணத்தையும் பெற்றுள்ளது.

In Syphilitic affections it is regarded as a great remedy so much, so that it is called "Vegetable Mercury".

துணை மருந்தாக சேரும் பச்சைப்பாக்கின் பண்புகள் :

துவர்ப்புச் சுவையுடைய வெப்ப வீரியம் கொண்ட பச்சைப்பாக்கு, துவர்ப்பிச் செய்கையைக் கொண்டுள்ளது.

Arecanut Contains 8 - 18% of tannin.

துணை மருந்தாக சேரும் சாதிக்காயின் பண்புகள் :

துவர்ப்புச் சுவையுடைய சாதிக்காய் வெப்ப வீரியத்தோடு காமம் பெருக்கி, உரமாக்கி செய்கையோடு கீழ்க்கண்ட குணத்தைப் பெற்றுள்ளது.

தாதுநட்டம் பேதி சருவாசி யஞ்சிர நோய்

ஓதுசுவாசங் காசம் உட்கிரணி - வேதோ

டிலக்காய் வரும்பிணி போம் ஏற்றமயல் பித்தங்

குலக்கா யிருந்துவர்க்குக் கூறு.

துணை மருந்தாக சேரும் சாதிப்பத்திரியின் பண்புகள் :

கார்ப்புச் சுவையுடைய சாதிப்பத்திரி வெப்பவீரியத் காமம் பெருக்கிச் செய்கையும் கீழ்க்கண்ட குணத்தையும் பெற

சாதிதரும் பத்திரிக்குத் தாபச்சுரந் தணியும்

ஓதுகின்ற பித்தம் உயருங்காண் - தாதுவிர்த்தி

யுண்டாங் கிரகணியோ போதக் கழிச்சலறும்

பண்டாங் குறையே பகர்.

துணை மருந்தாக சேரும் இலவங்கத்தின் பண்புகள் :

கார்ப்புச் சுவையுடைய இலவங்கம் வெப்ப வீரியத்தோடு கீழ்க்கண்ட குணத்தைப் பெற்றுள்ளது.

சுக்கிலநட்டங் கர்ண சூர்வியங்க லாஞ்சனந்தாட்

சிக்கல் விடாச் சர்வாசியப் பிணியு - மக்கிக்குட்

பங்குப் பூவோடு தரிபடருந் தோன்றிலில்

வங்கப்பூ வோடுரைத்து வா.

இச் சரக்குகள் அனைத்தையும் கருவேலம் பிஞ்சு சாறு விட்டு அரைத்துப் பட்டாணி அளவு மாத்திரைகளாக உருட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.

துவர்ப்புச் சுவையும், தட்ப வீரியமும் கொண்டு கருவேலம் பிஞ்சு துவர்ப்பிச் செய்கையும், ஆண்மைப் பெருக்கி செய்கையும் கொண்டு, கீழ்க்கண்ட குணத்தையும் பெற்றுள்ளது.

நீர்த்தொழுகும் விந்து நிலைக்கப் புரியுமெரி

பூத்தொழுகும் வெள்ளைதனைப் போக்குமிம் - மாத்திரமோ ?

தேசு தருமுரஞ் செய்யும் பெரியோராற்

பேசு கருவேலம்

தத்துவம் - ஓர் ஆய்வுக் கண்ணோட்டம் :

"வன்னியும் வாயுவுமாயுறுஞ் சுக்கிலம் "

- திருமந்திரம்

திருமூலர் வாக்கிலிருந்து சுக்கிலம் என்பது தீயும், வாயுவும் சேர்ந்தது என்பதை அறிகிறோம். மேற்கூறிய கருத்தின் வாயிலாக தீ அதிகரித்தாலோ, வாயு குறைந்தாலோ (அ) வாயு, அதிகரித்தாலோ, தீ குறைந்தாலோ ஏற்படக் கூடிய குற்றத்திற்கு "சுக்கிலக் கேடு" எனக் கொள்ளலாம்.

மேலும், இதனை நாடி அடிப்படையில் கூறினால்,

"சிறப்பான பித்தத்தில் வாதநாடி
சேரிலுறுந் தாது நட்டம் " உண்டாம்.

சுக்கிலக் கேடாக நவீன அறிவியலார் கூறுவது

Abnormal Sperms (or) Any disorder in Spermetogenesis

சுவை - பூத - முக்குற்ற அடிப்படையில் விளக்கம்

முதன்மை மருந்தான தென்னங்குறும்பை யின் சுவை - துவர்ப்பு (மண்காற் இச்சுவை யானது, ஆற்றலைத் தருவதோடுமட்டும்).

குருதி நாளங்களைச் சுருங்கச் செய்யும் தன்மை உடையது. இயல்பாக இது அழல் குற்றத்தைப் போக்கக் கூடியது.

துவர்ப்புச் சுவையில் சேரும் பூதங்களாவன - மண் + காற்று.

மண் பூதத்தின் குணமானது - நிலைத்தல்

காற்று பூதத்தின் குணமானது - தூய்மையாக்குதல் இலேசத்துவம்.

இதன்படி, சொப்பனக் கலிதத்தால் ஏற்படும் விந்து நட்டத்தில், மண் பூதமானது விந்துவை நிலைபெறச் செய்கிறது. காற்று பூதமானது, விந்துவை தூய்மையாக்கி, இலே சத்துவம் அடையச் செய்து, பிண்ட உற்பத் திக்குத் தேவையான இப்பூதத்தின் தொழிலான இடம் விட இடம் நகர்தல் பணியைப் புரிகிறது.

இதே போன்று பச்சைப்பாக்கும், சாதிக் காயும் தொழில் புரிகிறது. தென்னங் குறும்பை யின் தன்மை - தட்பம்

முக்குற்றத்தில் அழல் அதிகரிப்பதால் விந்து நட்டம் உண்டானது. எனவே, அழலைத் தணித்து, விந்து நட்டத்தை நீக்கும் பொருட்டு, தட்ப வீரியமுள்ள தென்னங்குறும்பையானது சேர்க்கப்பட்டுள்ளது.

கைப்புச் சுவை : (காற்று + விண்)

இச்சுவையானது மென்மைத்தன்மையை அளித்து, அழலின் விகற்பத்தை நீக்குகிறது.

பூதங்கள் :

காற்று பூதத்தின் குணமானது - இலேசாக்குதல்.

விண் பூதத்தின் குணமானது - தூய்மையாக்குதல்.

முதன்மை மருந்திற்கு, இணை மருந்தின் சுவையான இது நிலைப்பெற்ற விந்துவை மென்மையுறச் செய்கிறது.

கார்ப்புச் சுவை : (காற்று + தீ)

இச்சுவை வீரத்தைத் தருகிறது. இச்சுவையில் சேரும் பூதமானது காற்றும், தீயும். நிலைபெற்ற, மென்மையடைந்த விந்துவை, கருவுற்பத்தியில் ஈடுபடுத்தும் பொருட்டு வளர்ச்சிக்கும், தொழில்புரிவதற்கும் தேவையான வாயுவையும், தீயையும் இச்சுவையானது அளிக்கிறது.

"பாண்மை என்ற விந்தங்கே யூறும்போது

பாயுமப்பா வன்னியொடு வாயுதானே "

- வல்லாதி நாடி.

இக்கூற்றின் மூலம், இம்மருந்தில் சேரும் அனைத்து சரக்குகளும், சுக்கிலத்தை தம்பித்து, கருஉற்பத்திக்குத் தேவையான வன்மையான சுக்கிலத்தை உருவாக்குகிறது.

சிவப்பு நிலவு

காதல் நிலவு
பார்த்த நினைவுகள்
ஒன்றா! இரண்டா!
இந்த இதயத்தில்...
வளர்பிறையா!
தேய்ப்பிறையா!
எதுவென்று நீ சொல்...

இயற்றியது
பொ.அ. ராஜ்குமாரன்

THE HEALING TOUCH - MASSAGE THERAPY

J.GRACIA, N. VANI DHANALAKSHMI
Final Year

Consider this therapy for :

Massage isn't capable of curing any serious or life-threatening medical disorder, but it can provide welcome relief from the symptoms of anxiety, tension, depression, insomnia and stress as well as back pain, headache, muscle pain and some forms of chronic pain. It's also frequently recommended for the treatment of minor sports injuries and repetitive stress injuries, and for the enhancement of physical conditioning.

How the treatments are done :

These are dozens of specialized massage techniques in use today. However, the most widespread variation builds upon the five basic strokes of Swedish massage.

1. Effleurage :

Slow, rhythmic, gliding strokes, usually in the direction of blood flow toward the heart, for example, from wrist to shoulder. Usually the massage therapist uses the whole hand, gradually applying an increasing amount of pressure.

2. Petrissage :

Kneading, pressing and rolling muscle groups. The massage therapist will take hold of the tissue and alternately tighten and loosen his grasp.

3.Friction :

Steady pressure or tight circular movements across muscle fibres without moving across the skin, often used in areas around joints.

4. Percusssion (Tapotement) :

Drumming hand movements in broad areas of body, particularly the back. Techniques include beating with the side of loosely clenched fists ; cupping or striking with the finger tips and heel of the hand; hacking, rapid chopping motions with the edge of the hand ; and clapping, using the flattened hand to clap rapidly over the fleshy areas.

5. Vibration and jostling :

Vibration entails rapid movements ; Jostling requires rapid shaking of a muscle back and forth.

Some specialized techniques employed for specific purposes :

Neuromuscular massage : (Trigger point therapy)

This technique applies concentrated finger pressure to painful areas in muscles called trigger points.

Deep tissue massage :

Slow strokes and deep finger pressure on areas of the body suffering from chronic muscle tension or areas that simply ache.

Sports massage :

This prevents injury and aid healing in case of soreness or injury. It is used inthe treatment of sports injuries.

What treatment hopes to accomplish :

Massage is nothing more than a systemic manual application of pressure and movement to the soft tissue of the body. It encourages healing by promoting the flow of the blood and lymph, relieving tension, stimulating nerves and stretching and loosening muscles and connective tissue to keep them elastic.

There is also some scientific evidence to support claims that massage enhances the immune system and aids recovery from soft tissue injuries.

In addition to its general health benefits, massage has shown value for a variety of special problems in a host of recent medical studies :

• In premature infants, massage therapy was found to enhance weight gain and shorten hospital stays.

• When given massage, babies of HIV - positive mothers achieved greater weight gain.

• Massage was shown to promote relaxation and alleviate pain and anxiety in hospitalized cancer patients.

• Massage reduced anxiety and lowered stress hormone levels in children with Asthma.

• Mothers who where massaged during labour experienced less agitation, faster delivery and less post - partum depression.

• Slow - stroke bark massage in hospice patients was found to lower blood pressure, heart rate and skin temperature.

• After daily massages for a month, a group of men with HIV infection had improved immune function and decreased anxiety.

Who should avoid this therapy :

Generally, massage is not advised for anyone with an infectious skin disease, a rash or an unhealed wound. Circulatory ailments such as phlebitis or varicose veins preclude the use of massage, it should never be performed directly over inflamed or infected injuries, or at sites of recent fractures or sprains.

Massage is not recommended for cancer patients immediately after chemotherapy or radiotherapy.

Forego massage in the abdominal area for atleast 2 hours after eating and if you have an abdominal hernia, avoid it completely. Abdominal massage is strictly avoided during the first three months of pregnancy ; during this period, massage of the legs and feet is also inadvisable.

What side effects may occur :

Massage can aggravate existing swelling. The pressure that massage exerts on the skin can be painful for someone who has a nerve injury.

நஞ்சு முறிவு

உணவால் வந்திடும் விடங்களுக்கு
உற்றதொரு மருந்தைச் சொல்வேன்கேள்!
கனமான கொழுப்பைத் தன்னகத்தே
கொண்டிட்ட நெய்க்கோ பசுவின் பால்

தேன் நெய் ருசியென்று அருந்திவிட்டால்
தீர்ந்திடும் கரிநீர் உண்டுவிட்டால்
எண்ணெய் மிகுந்தால் விடமாகும்
எடுத்தால் ஊசற்கொடி அது தீரும்.

கடலை துவரை மொச்சை உண்டால்
கருத்தில் கொண்டிரு செம்மண் நீர்
முட்டை அருந்தில் வாயுமிகும்
முள்ளங்கி கிழங்காலது போகும்

ஆடை பாலென்றும் அருந்தாதே
அருந்தினால் புளித்தமோர் மறக்காதே
விடமாகும் வாழைப் பழமிகுந்தால்
விரைவாக புகையிலை குடிநீர்கொள்.

பலாக்கனி சுவைதான் மிகுந்துண்டால்
பரிவுடன் நெய்தேன் இவை கொள்ளு
சிலவேளை குடிநீரை விடமாகும்
சிலதுளி தேன்விடு அது போகும்

புகையிலைச் சுவைத்திட விடமாகும்
புகழ்கீரை பகத்தி மருந்தாகும்
வகையான கோதுமை பொருள்களுக்கு
வன்காரம் நெய்பால் முறிவாகும்.

இலவம் பிசினை மிகுந்துண்டால்
இருவேளை தவறா நாள்மூன்று
மலைமகள் துணையவன் வேம்புடனே
மனதுடன் வெந்நீர் சேர்த்துரைத்து

இலையினி விடமது ஒழிந்ததென
இன்பத்தை கொண்டு நீ அருந்தி விடு
இலிங்க விடமோ பச்சரிசி
இனித்திடும் கரும்பிவை போக்கும்.

வெள்ளைச் சங்கன் பழச்சாறு
வினைதரும் ஊணான் பிணிபோக்கும்
கொள்ளை நீரில் அரைத் துண்ணு
கொட்டை நாவல் விடம்போகும்

இல்லை மல்லிநெய் உண்டால்
எரிச்சல் பிறகுறி மிளகாயால்
தொல்லை குன்றி நஞ்சாலே
தொலைத்திடும் வெங்காரம் அஞ்சாதே

எண்ணெய் அழவணமிவை சேர்ந்தால்
எண்ணற்ற குறிகுணங்கள் உண்டாகும்
தான்றித்தோலை நசுங்கியுடன்
குடிநீர் தந்திட்டால் தொலைந்து போகும்.

எண்ணையும் சோறும் கலந்துண்டால்
என்றைக்கும் நஞ்சு அதைப் போக்க
முன்னமே சேர்த்திட்ட காடிகுடி
மூலை தெரியாமல் விடம்போகும்

வெற்றிலை எண்ணெய் இவை சேர்ந்தால்
காடம் தீர்க்கமு் தேங்காய் பாலதினால்
சோற்றினை அதிகம் உண்டுவிடின்
சுகம்தரும் குளிர்நீர் தனையருந்து

வற்றிய உடலோ உப்பிவிட
வகையாய் உளுந்தினை உண்ணுங்கால்
சீரகம் கொள்ளு தேனுடனே
சிறிதேனும் மிளகு கொண்டு விடு.

தெரிந்தும் தெரியாமலும் நஞ்சுண்டோம்
தெரிவோம் அதனால் சில முறிவு
எருக்கின் பாலொரு மருந்தாகும்
இருந்தாலும் மிகுந்தால் விடமாகும்

பருத்தியின் இலையைக் காடி விட்டு
பாக்களவு உண்டிட விடம் போக்கும்
சர்க்கரை எள்ளிவை சேர்ந்திட்டாலும்
சத்தியமாய் எருக்கின் விடம் போகும்.

கஞ்சா மயக்கம் சுக்காலும்
இதலிச் சவ்வீரச் சாறாலும்
எஞ்சாது முறியும் இதுவுண்மை
இலைக்கள்ளி வேர்க்குடி நீராலும்

அஞ்சுதல் மடமை அபினிக்கு
அதன்விடம் போக்கும் கலைக்கள்ளி
மஞ்சள் அலரியின் மாநஞ்சோ
மருலும் துருசு வெந்நீரால்

ஆகம் குளிர நுங்குண்ணு
அதுமிகின் உண்டிடு பொரிகாபம்
ஆங்காரம் போக்கும் நாடிவிடம்
வெங்காரம் பசுநெய் சேர்ந்திட்டால்

ஆவின் நெய்யுடன் பன்றிமலம்
அங்கம் வகிக்க மேன்மையுறும்
ஆன்றோர் வாக்காய் அனைத்தையும்
சுபயன்தோல் குடிநீர் கொள்ளே!

நேர்வாளம் மிகுந்தால் விடமாகும்
நேரான மருந்தின்றேல் முடிவாகும்
சீரகம் தன்னில் தேன்விட்டு
சீராய் வதக்கி நீர்விட்டு

பேருக்காக அல்லாமல் பெருஞ்சிந்தை
பெயர்த்திடாக் குடிநீரிட்டு
ஈரிரு முகைள் தினமூன்றாம்
என்னுபடி கொடுத்திட விடமுறியும்

கோரைக் கிழங்கும் பேய்பீர்க்கும்
கோநெய் நல்நெய் சேர்ந்ததுவும்
தேர்ந்த உளுந்து வடை யதினால்
வெண்கொடி வேலியின் விடம் போகும்

சேராங் கொட்டை அதன் நஞ்சோ
செங்கற் பொடியால் ஒற்றுயிட
சேராது வீக்கம் மெழுகெண்ணெய்
சேர்ந்துக் காய்ச்சிய பூச்சதனால்

கலந்திடும் உலோக விடங்களுக்கு
கரும்பொன் கலந்திட்ட மருந்தருந்து
போளத்தின் நஞ்சுக்குபேரரத்தை
புகழ்ச்சிக் கிலையதை நினைவுனுத்தே

கலப்பைக் கிழங்கால் கடும் விடமே
கலந்திடும் விரைவில் உடல்தனிலே
பலமாய்தனை முறித்திடவே
புகழ் நீலிக்குடிநீர் தனையருந்தே

-மலர்க்குழு

CINNAMOMUM ZEYLANICUM

இலவங்கப்பட்டை

INDIAN NAME : DALCHINI

S. RAJESWARI
Third Year

INTRODUCTION

Cinnamon is a aromatic plant. Commonly it is used as a flavouring agent and is a constituent in many spice mixtures, used all over India.

CONSTITUENTS

In the bark - Cinnamaldehyde, Cinnamyl acetate, Eugenol.

In the leaves - Eugenol, Eugenol acetate, Safrole.

An analysis of cinnamon shows moisture, protein, fat and carbohydrates. Cinnamon also contain essential oil known as cinnamon oil. This essential oil consists of substantial amount of Eugenol and safrole.

CINNAMIN ACTION IN ACUTE

RONCHITIS

Acute bronchitis implies acute inflammation of the bronchi caused by Pyogenic group of organisms, which includes Streptococcus, pneumococcus, and staphylococcus.

Due to the presence of eugenol and safrole, cinnamon shows good effect in acute bronchitis.

PROPERTIES OF EUGENOL

- Antiinfective
- Immuno Stimulant
- It inhibits the inflammation

It inhibits the secretion of the inflammatory prostagladins at the human mucous membrane. It is an excellent bacterial antiseptic and analgesic.

Eugenol, Gerangl acetate, safrole acts an bronchial secretions the secretion of mucous clearly reduces. This effect of engenol is especially interesting in the case of all patients who exhibits a hyper secretion of mucous.

OTHER USES OF CINNAMON

CURATIVE PROPERTIES OF CINNAMON

Cinnamon leaves are used in the form of powder or decoction. They are stimulant and useful in releiving flatulence Cinnamon presents nervous tension.

DIGESTIVE DISORDERS

Cinnamon checks nausea, vomitting and diarrhoea. It stimulates digestion. A tablespoon of cinnamon water prepared as for cold and taken half an hour after meals will relieve flatulence and indigestion.

COMMON COLD

Coarsely Powdered and boiled in a glass of water with pinch of pepper powder and honey. Cinnamon oil mixed with the honey will give relief from cold.

HEAD ACHE

Head ache produced by exposure to cold water is readily cured by applying a paste of powdered cinnamon mixed in water on the temples of the forehead.

ACNE

Paste of Cinnamon powder prepared with few drops of fresh lime juice can be applied over pimples and blackmarks with beneficial result.

"HEALTHY - LIFESTYLE"

Tips to stay trim

1. "Eat a nutritious breakfast, never skip the meal"
   - It keeps you alert and will keep you going for the day.

2. "Drink plenty of water".
   - It relieves constipation and keeps your skin supple and maintains our body in the right condition.

3. "Include whole grains & fibre rich food"
   - It can prevent many chronic diseases.

4. "Consume sweets and fried foods occasionally"
   - Excess consumption can worser blood sugar and cholesterol level and adds to weight.

5. "No fasting or feasting"
   - It avoids gastritis and obesity.

6. "Exercise - Everyday"
   - It warms up your muscles and walking for 30 min. a day keeps you good.
   - Use stairs, instead of lifts.

7. "Maintain ideal body weight"
   - It keeps you firm & trim.

8. "Spend time with family and friends "
   - It reduces your mental and physical stress

G.YAMUNA
Fourth Year



ஆபாசம் காதல் காமமாகும்

ஆ! பாசம் காதல் ஆன்மீகமாகும்

ப. இராஜ்குமார்
மூன்றாம் ஆண்டு

அன்பின் வடிவம்

உன் உருவை சிலை வடித்து
என் கண்ணை அதில் வைத்து
இமயமெல்லாம வியந்து போக
இயக்கி வைத்து இன்பம் காண்பேன்!

ச.குமார்
முதலாம் ஆண்டு

SOME KNOWN ETHICS AND UNKNOWN REASONS

K.SUBHASRI, S.ELANGOVAN
Fourth Year

Females usually do not reach the same height as males :

The growth of an individual in height is due to growth of his/her long bones in the limbs.

- Epiphyseal plates of long bones (viz.upper and lower limbs) are responsible for growth in height.
- Sex hormones such as oestrogen and testosterone stimulate ossification of the epiphyseal plate and thus the cessation of growth.
- Females usually stop growing earlier than males because oestrogen causes a quicker closure of the epiphyseal plates than does testosterone.

The telephone numbers are usually seven to eight digit long :

- The short-term memory, where information is retained for a few records to a few minutes.
- This memory consists of the number of bits of information that can be stored at any one time, which is usually about seven or eight.
- That is why the telephone numbers are seven to Eight digit long.
- However more bits can be stored when the numbers are grouped into specific regments seperated by space, when adding on area code.

On touching a live electrical wire, the hand gets tightly closed and hold on the wire :

- On touching a live electrical wire the body gets a strong stimulus, making all the muscles to contract.
- Since the flexor muscles of the hand are stronger than extensors, there is a prepondence of flexion of the hand.
- Consequently the hand gets tightly closed and hold on the electrical wire.

Popping or cracking sounds are produced when fingers are forcefully pulled or best at interphalangeal joints :

- The interphalangeal joints are of synovial variety. When a synovial joint is pulled upon, its volume is suddenly expanded and the pressure of the joint flexed is decreased, causing a partial vaccum within the joint.
- As the joint fled is displaced within the vaccum hits against an articular cartilage, a popping or cracking sound is produced.

The blow on the head often produces a black eye two days after the injury :

- A blow on head may lead to bleeding into the layers of loose areolar tissue and its associated muscles.
- Blood from loose areolar tissues

layer spread posterity and sidewords upto zygomodi archer.

- Anteriorly it may track down first in the upper eyelid and then in the lower eyelid with in a couple of days.
- The gravity will assist this accumulation of blood in the eyelids. The blood clots and eyelids appear black.

The person's nose often 'runs' when he or she cries :

- The tears are produced in the lacrimal gland. Most of the tear fluid evaporates, Bur the excess tears are collected in the lacrimal sac.
- The lacrimal sac continues into the naso lacrimal duct. This duct opens into the nasal canal.
- The crying produces extra tears, which are conducted to the nasal carity causing a "runningnose". The exces tears also spill over the edges of lower eyelids and role over the checks.

The crying of a newborn baby is dry-eyed :

The crying of a newborn baby is dry eyed because the lacrimal gland does not secrete tears fluid unit 4-6 weeks after brith.

The males usually have low pitched voices than females, however their voices are louder than females :

- The males have longer vocal cords than females, therefore the vocal cords of the male vibrate more slowly but with greater amplitude of vibration.
- Consequently the males usually have low pitched voices females and their voices are louder than females.

On ejaculation, the seminal fluid does not enter into the urinary bladder :

- The sympathetic when stimulated cause the epididymis, vas deferens, seminal vesicles and prostrate to contract and empty their contents (ejaculation).
- cause the internal Sphincter of urethra to constrict.
- so that the region of neck of bladder is shut off. Hence on ejaculation, the seminal fluid is prevented from entering into the urinary bladder.

The 'sinusitis' is more common in habitual smokers :

- The nasal cavity (respiratory region) and para nasal sinuses secrete a thick layer of mucus.
- The cilia on the surface of mucous membrane help in the drainage of the secretion.
- In smokes these cilia are destroyed hence they are prove to suffer from sinusitis.

The flat appearance of the sole of foot is normal in infants :

The arches of foot are present at birth, butthe concavity of the arch is filled with subcutaneous fat-pads. There fore the foot appears flat.

Some people can run fast for short distance while other are good long distance runners:

- This is because of rate of distribution of fast-twitch and slow twitch muscle fibres in their leg muscles.
- The fast-twitch muscle fibers have relatively poor blood supply and levs myogloblin hence they contract rapidly for short time but fatigue quickly.
- The slow - twitch muscle fibers have well developed blood supply and large around of myoglobin hence they contract slowly for longer time and fatigue slowly.
- Thus persons having greater percentage of

  Fast twitch muscle fibres - run fast for short

  Slow twitch muscle fibres - good long distance runners.

The diagram of the practical appreciation of the 'blind spot' :

- Hold the drawing about 20 inches away from your face with your left eye closed and your right eye focussed on the circle.
- Slowly move the drawing closer to your face until the cross disappears
- This occurs because the image of the cross is focussed on the optic disc (blind spot) where the photo receptors are absent.

AIDS - A BIODATA

B.Anuradha
Final Year

Name : Aids - Acquired Immuno Deficiency syndrome.

Parent :HIV - Human Immuno deficiency Virus

Age, Year of birth : 21 years 1983.

Founders : Robert Gallo [USA], LUC Montegnier, [Pasteur institute, Paris]

Occupation:- Destroying the "T" cells of human body.

Sub Occupation : Helping other diseases to enter the human body and killing.

Life long achievement : Has terrorised the world with his cruelty.

Achievement : Yet unconquerable by any drugs.

Favourite Proverb :"A FRIEND IN NEED IS A FRIEND INDEED", [He helps his friendly diseases]

Disliked Proverb :- "HEALTH IS WEALTH" : "PREVENTION IS BETTER THAN CURE"

Motto : "Kill for joy"

Friends : Unsterilised medical equipments, Heterosexual contact, AIDS affected mother, Blood transfusion [These all help him to spread].

ஆதங்கம்

மரபுக் கவிதைதான்
எனக்கு
பிடிக்கும்!

அந்த பூச்சரத்தில்
தான் - என்
கவிதை பூக்களை
தொடுக்க ஆசைப்பட்டேன்!

காலச் சூழலில்
புதுக்கவிதை
சிப்பிதான் - என்
கையில் பிடிபட்டது!

சிப்பிக்குள்
முத்தெடுக்க
முயல்கிறேன்!

சமுகத்தின்
அழகினை
அலங்கரிக்க

ஆ. சதீசுகுமார்
இறுதி ஆண்டு

நிழல்

இமையின் நிழல்
கண்களுக்கு
இலைகளின் நிழல்
இளைப்பாறும் உள்ளங்களுக்கு
இமயத்தின் நிழல்
இம்மண்ணிற்கு
இதயத்தின் நிழல்
நினைவுகளுக்கு
தாய் மானின் நிழல்
குட்டிமானின் உறக்கத்திற்கு,
என்றும்
நிழல் தரும் நிழல் என்றும்
நிழலை தேடியதில்லையே....!

ஜி. நிஷா
இறுதியாண்டு

GARLIC AND IT'S HITS

M.Subhashini
Third Year

Garlic is a bulb made up of 'cloves'. Normally garlic varieties do not produce seeds, due to lack of sexual reproduction varietal improvement, has to be secured through bulb section. Garlic has a pungent smell due to the presence of unsaturated sulphides.

CHEMICAL CONSTITUENTS :

Garlic has the following constituents :

- Phosphorous - 310 mg
- Iron - 1.3 mg
- Calcium - 30mg
- Vitamic - C - 13mg
- Calorific Value - 145k cal/100g

The chief constituent are the Sulphur compounds -

Cysteine Sulforide (eg) Allicin

Thiosuyinates (eg) Allicin

Dially Sulphide.

PHARMACOLOGICAL ACTIVITIES

- Antibacterial
- Antifungal
- Anti Hyperlipidaemic
- Anti Hypertensive
- Anti Neoplastic
- Hypo Glycaemic
- Anti inflammatory
- Anti Spasmodic
- Anti Arthritic

PHARMACOLOGY

ANTIBACTERIAL AND ANTIFUNGAL ACTIVITY :

The essential oil and the juice inhibits in Vitro growth of Bacillus Species, Mycobacterium Tuberculosis, Escherichia Coli. The antibacterial activity is attributed to allicin.

ANTI HYPER LIPIDAEMIC EFFECT

Fresh garlic, garlic juice lowers cholesterol and plasmo lipids. The water - soluble extracts inhibits cholesterol biosynthesis. The activity appears to involve the inhibition of hepatic, HMG - coA reductase and remodeling of plasma lipoproteins and Cell Membranes.

Moreover, Hypolipaemic activity is due to increased excretion of cholesterol through faeces, and diminish endogenous synthesis of cholesterol.

ANTI HYPERTENSIVE EFFECT

The drug appears to decrease Vascular resistance by directly relaxing the smooth muscle, The aqueous extract induce membrane hyperpolarization in the

cells, by the opening of k^+ channels resulting in "Vasodilation". Since the calcium channels were closed.

Apart from BULBUS ALLIUM SATIVI increases the Production of nitric oxide, associated with a decrease in Blood Pressure.

Aqueous garlic extracts and garlic oil alter the plasma fibrinogen level, coagulation time, fibrinolytic activity.

Garlic inhibits platelet aggregation both in vitro and in vivo. Because of Increased Fibrinolytic Activity - it prevents ISCHAEMIC, HEART DISEASE, CORONARY THROMBOSIS.

HYPO GLYCAEMIC EFFECT

Garlic bulbs administered orally reduced Polydipsia. The extract's of garlic appear to enhance insulin production,

ANTIINFLAMMATORY EFFECT

The anti inflammatory activity of the drug appears to be due to its Anti - Prostaglandin activity. Prostaglandin are compounds which increase the inflammation at the site due to any infection or injury. So effective in the treatment of 'Rheumatoid Arthritis'.

The ethanolic extract of drug showed Anti - Spasmodic activity. The juice relaxed the smooth muscle of ileum, heart and also inhibited norepinephrine, acetylcholine and histamine induced contractions.

EFFECT ON LEPROSY

In case of Leprosy administration of garlic extracts altered the Biological Index and improves the clinical condition. Garlic acts as a cleaning and disinfecting medium.

Apart from it incorporation of Garlic in the diet at moderate level, shifts the balance of the microflora in the intestine, in favour of the lactic organisms, which has favourable effect on the absorption of the minerals in the diet.

ANTI NEOPLASTIC

Garlic is used as an antiseptic for the prevention of gangrene due to its antiseptic and germicidal property. It has antineoplastic and antitumour activity.

DOSAGE FORMS

- Fresh bulbs
- Dried Powder
- Volatile Oil
- Aqueous or alcoholic extracts are the forms of administering Garlic.

Thus GARLIC acts as an ALLROUNDER, controlling all the systems in our life.

கையிருப்பு

இன்றைய மகிழ்ச்சியிலும்
நெஞ்சில் கரிக்கின்றது
நேற்றைய கசப்புகள் - எனினும்
கால்கள் தளர்ந்தபோதும்
கை கொடுத்தது என்றுமே
தன்னம்பிக்கை!

சிமிழ்

Musa Paradisiaca - Banana

R.Kalaivani
Final Year

Medicinal uses :-

1.Mild Laxative

2. The sugars present tend to increase Gram (+) or acidic groups of micro organism in the intestines and decrease Gram (-) organisms.

3. The fruit aids in combating diarrhoea and dysentery, promoting the healing of intestinal lesions in ulcerative colitis.

4. Banana powder is effective in the treatment of coeliac diseases, sprue and other form of carbohydrate intolerance in children. It is used for certain intestinal disorders in adults.

5. A syrup prepared of the ripe fruit may be incorporated with milk and used for infant feeding.

6. The ripe fruit is reported to be useful in diabetes, uraemia, nephritis, gout, hypertension and cardiac diseases.

7. Unripe fruit and cooked flowers are useful in diabetes.

Ash of the root is useful anthelmintic juice of the flowers are used for dysentery.

Stem and root are useful in disorders of the blood.

8. Pulp & peel contains Serotonin, Nor epinephrine, Dopamine

(i) Serotonin inhibits gastric secretion and stimulates smooth muscle in the intestine and elsewhere.

(ii) Norepinephrine is a mediator of autonomic function and is widely used as a vasoconstrictor agent.

(iii) Norepinephrine is a mediator of autonomic function and is widely used as a vasoconstrictor agent.

9. The skin and pulp of green banana contain antifungal substances, while the skin and pulp of the ripe banana contain both antifungal and antibacterial substances.

10. An antibacterial factor active towards acid-fast bacteria (Mycobacteria) is present in banana.

தாய்மை

தூங்கிய உன் விழிகளைக் கண்டு
தூங்காமல் விழித்திருக்கிறேன்
பேசிய உன் அதரங்களைக் கண்டு
பேச மறந்து நிற்கிறேன்

சிரித்த மழலைச் சிரிப்பினைக் கேட்டு
சிலையென நிற்கிறேன்
நீ எனக்கு மகனாக வாய்த்ததினாலேயே
நான் தாயாகப் பூரிப்படைகிறேன்

பூ. செயரூபா
மூன்றாமாண்டு

மழையே !

நீ மேகத்திலிருந்நது முத்துத் துளிகளாய்
வீழாததால் எங்கள் உழவர் கண்களிலிருந்து
வழிகிறது இரத்தத் துளிகள்.

மழையே!

நீ வந்தபின் வீசுவதோ தென்றல்காற்று
நீ வராததால் என் மனிதில் அடிப்பதோ புயல்காற்று

மழையே!

நீ பெய்வதால் வருவதோ மண்வாசம்
அதில் தொலைந்து போவதோ என் சுவாசம்
என் சுவாசம் தொலைந்து விடுமோ என அஞ்சவில்லை
என் அச்சமெல்லாம நீ தொலைந்து விடுவாயோ என்பதுதான்!

அ. அனிதா
முதலாம் ஆண்டு

நட்புக்காக

பயிலும் நாட்களில்
பலவித பறவைகளாய்
பாடித் திரிந்தும்
கவலைகளை காற்றிலே கரைத்து
ஆசைகளை அரும்புவிட்டு
மகிழ்ச்சி மண்ணில் மின்னும்
மின்னும் வைரங்களாய்
இருந்த நாம் என்றாவது
ஒருநாள் காலக் கடலில்
திசைமாறி பிரிந்திடுவோம்
நம் பாதைகளும், பயணங்களும்
வெவ்வேறாக இருக்கலாம்
ஆனால் இன்று நாம்
கொண்ட நட்பு என்றும்
வேறல்ல

சி. கோவிந்தராசு
இறுதியாண்டு

THOKKANAM [Therapeutic Massage]

V. NARMADHA
Final year

1. Thokkanam for Keel Vayu [Arthritis] :

Pain in Arthritis is caused by poor circulation in the joints. For better degree of circulation in that area, the affected part should be given fomentation with warm water for about 3 minutes.

The 1 minute application of Hot water should be done then fomentation with hot water should be repeated.

Thokkanam with a Sivapu Kungiliya Thylam and Sivapu Thylam, before the application of oil, sprinkle some powdered camphor in that particular oil and warm the oil before giving the thokkanam, this will enhance the circulation in affected area.

After this massage tie strip of cloth coated with clay paste on the affected area and let it remain for 40 min. This treatment can be continued for 40 days.

2. Vali Azhal Keel vayu (Rheumatism) :

In this disease maximum pain is experienced in the joints. Joints are the area where the blood vesels have to take a turn and it is natural that waster material gets clogged near the joints, with a increase of acidity in the blood and also one who suffers with disease caused by blood impurity.

The digestion become poor and one suffers by indigestion, constipation.

To balance the body's Biochemistry according to our Siddha Principle.

"Veresanathal Vatham Thazhum"

"Vamanathal Pitham Thazhum"

"Nasiathal Kabam Neengum"

THOKKANAM	These three to
VETHU PIDITHAL	balance our body
PEECHU	Chemisty.

The toxins deposited near the joints cause Rheumatic pain. And as long as these deposits remain health can be brought back.

Steam fomentation on the back, thokkanam, Vethupidithal combined can do miracles.

3. Vatha Sthambam (Sciatica) :

Sciatic Nerve is located at the Level of L_4, L_5, and S_1 (waist region) - the altered mechanics of Lumbar spine injure (or) compress the nerves which leads to spasm of Para Spinal musculature - that is constant aching pain is felt in the Lumbar region and may radiate to buttock, thigh, calf and foot.

Gentle Application of thokkanam with Light pressure can be applied over the affected region. Heat is needed at the point of pain near the hip bones, buttock, thigh and ankle.

A sun bath and Thokkanam in sunlight helps. Use a strip of cloth coated with paste made from moosambram patru with a white of egg (or) flour of black gram (Ulunthu) with white of egg (or) Amukkra Patru with white of egg can be applied to the affected Area.

4. Kuruthi Azhal [High Blood Pressure]

Massage in the case of Hypertension is very effective remedy but it should not begin from the head and move towards the feet.

Very gentle massage with light pressure is applied. Massage with cooling oil is very helpful.

What ever may be the cause, of this disease the cure is one - Purification of blood vessels by the intake of more liquids especially water, balanced diet, thokkanam.

Best medicated oils for Thokkanam :

1. Sivapu Kungiliya Thylam
2. Sivapu Thylam
3. Vida Mushti thylam
4. Kaya Thirumeni thylam
5. Ulunthu thylam
6. Chitramuti thylam
7. Sadamanjil thylam
8. Karpurathi thylam

WHAT KIND ARE YOU ?

G.LATHA
V.VALLIMALAR
Final Year

Some people never seen motivated to participate but are just content to watch while others do the work. They are called "Spec Taters".

Some people never do anything to help but are gifted at finding fault with the way others do the work. They are called "Comment Taters".

Some people are very bossy and like to tell others what to do but don't want to soil their own hands. They are called "Dick Taters".

Some people are always looking to cause problems by asking others to agree with them. It is too hot or too cold, too sour or too sweet. They are called "Agie Taters".

They are those who say they will help but somehow just never get around to actually doing the promised help. They are "Hezzie Taters".

Some people can put up a front and pretend to be someone they are not. They are called "Emma Taters".

Then there are those who love others and do what they say they will. They are always prepared to stop what ever they are doing and level a helping hand. They bring real sunshine into the lives of others. They are called "Sweet po Taters".

நீரிழிவைக் கட்டுப்படுத்துவதில் நாவற் கொட்டை மாத்திரையின் பங்கு

கு.மு. ஹேமலதா,
இறுதியாண்டு

*"உழைப்பால் பசிவென்று
உடல் நலத்தால் பிணிவென்று
அன்பால் பகையை வென்ற நாடே"*

உலகில் தலைசிறந்த நாடாகும், என்று வள்ளுவன் கூறக் கேட்டுள்ளோம். அவ்வாறு வளர்ச்சிடையந்த நடாக மாறிக் கொண்டு இருக்கும் நம் மக்களுக்க அச்சுறுத்தும் வகையில் உள்ள நோய்களில் "மதுமேகம்" எனப்படும் நீரிழிவு நோயும் ஒன்றாகும்.

"பகற்பித்த விந்தையலாது மேகம் வராது" எனத் தேரையரும், 'கன்னி மயக்கத்தால் கண்டிடுமே மேகம்" என்று திருமூலரும், இந்நோயின் முதற்காரணங்களைக் கூறியுள்ள னர்.

இயல்பாக மனித உடலில் இருந்து வெறியேறும் 'அறுநீர், மும்மலமும்" தன் இயற்கை அளவில் மாறுபட்ட, அதிக அளவில் அடிக்கடி சிறுநீர் இழிதலும், அதனைத் தொடர்ந்து ஏழு உடற்தாதுக்களும் வன்மை குன்றி காணப்படுவதுமாக இந்நோயின் இயல்பை சித்தர்கள் கூறியுள்ளனர்.

இதைத்தான்

*"பற்பிடித்த மேகமென்றால் பித்தம் மீறும்
பாலகனே காங்கை கொண்டு நீராம் பாரே'*

என்றும்

*"குறியுடனே மேகந்தான் கொடுமை செய்து
குறைந்து வரும் தாதுவெல்லாம் குன்றிப்
போகும்"*

என்றும் பதினெண் சித்தர் நாடிநூல் கூறுகிறது.

மருத்துவம் :

இத்தகைய மதுமேக நோய்க்கு 'நாவற்கொட்டை" - யைப் பொடித்து "ஆடுதீண்டாப்பாளைச்" சாறு விட்டு 8 சாமம் அரைத்து, பட்டாணி அளவு மாத்திரைகளாக உருட்டி, காலை, மாலை, ஒரு மாத்திரை வீதம் உண்டு வர இந்நோய் எவ்விதம் குணமாகும் என்பதை, நவீன அறிவியல் கருத்துக்கள் உடன் சற்றே ஆய்வோம்.

சித்தகர்கள் அறிவியலின்படி நாவற் கொட்டையில்,

நாவல் கொட்டையானது "**துவர்ப்புச்**" சுவையைக் கொண்டது. உடற்கு வன்மை அளிப்பதுதான் "துவர்ப்பின்" முதன்மைச் செயல் ஆகும்.

நாவல் கொட்டையை மட்டும் தூள் செய்து, 4 கி, அளவில் கொடுத்து வர நீரிழிவு குணமாகும் என்பதை

"சேர்ந்ததொரு நீரிழிவுஞ் சேருமோ"

என்றும்

"ஓதமுறு நீரிழிவு முந்துரத்த"

என்றும் சித்தர்களின் பாடல் குறிப்பிடுகின்றது.

நவீன அறிவியலின்படி!

இக்கொட்டையில் "**ஜாம்போலின்**" என்ற குளுக்கோஸைடு உள்ளதாகக் கண்டறிந்தனர். இது நீரிழிவு நோயில் கிளைக்கோஜன் சிதைந்து குளுக்கோஸாக மாறுவதைத் தடை செய்கிறது.

மேலும் இதன் ஆல்ஹாலில் இருந்து வடித்தெடுத்த சத்தை, நீரிழிவு, நோயுள்ளவர் களுக்கு செலுத்தி இரத்தம், சிறுநீரில் உள்ள சர்க்கரையின் அளவை குறைக்கும் சோதனையில், "லக்னோவில்" உள்ள மத்திய

மருந்து ஆராய்ச்சி நிறுவனம் வெற்றியும் கண்டுள்ளது.

நன்கு உலர்ந்த நாவல் கொட்டையில்,

நார்ப் பொருள்	- 16.19%
புரதப் பொருள்	- 8.5 %

உள்ளதால் இந்த நார்ச்சத்தானது இரத்ததில் உள்ள சர்க்கரை அளவைக் குறைத்து இன்சுலின் தேவையையும், குறைத்துவிடுகிறது.

இதனால் இன்சுலின் சரியான முறையில் செயல்கட்டு, இரத்தம் மற்றும் சிறுநீரில் வெளியேறும் சர்க்கரை அளவை கட்டுப்படுத்துகிறது.

இதன் விளைவால் "தீராத தாகமும் " போக்கப்படுகின்றது.

ஆடுதீண்டாப்பாளை :

இங்கு துணைச் சரக்காகச் சேர்க்கப்பட்ட ஆடுதீண்டாப்பாளையானது தாதுக்களையும் உரமாக்கும் வகையில் அமையும் என்பதை

"தின்பெறு நற்தாதுவுமாஞ் செப்பு"

என்று அகத்தியர் கூறுகிறார்.

மேலும் ஆடு தீண்டாப்பாளையை சீரகத்துடன் சேர்த்து கற்கமாகத் தந்து வந்தால் "நீரிழிவு" குணமாகும் என்று 'அகத்தியர் பதார்த்த குண போதினி' கூறுகிறது.

தீர்வு :

நீரிழிவு நோயில் பித்தம் முதற்குற்றமாக பாதிப்பிற்குள்ளாதனால், அதைக் குறைக்க தட்பப் பொருளான நாவல் கொட்டையையும்,

"ஆடுதீண்டாப்பாளையால் என்பது வாயுவும் இகல்குட்டமுந்தீரும்" என்பதனால் துணைக் குற்றமாக வாயு பாதிக்கப்படுவதால் அதைக் கட்டுப்படுத்தவும் தரலாம்.

மேலும் "தின்பெறு நற்தாதுவுமாஞ் செப்பு" என்பதினால் இந்நோயின் தீவிர நிலையில் 7 உடற்தாதுக்களும் வன்மை குன்றுவதைத் தடுக்கவும், ஆடுதீண்டாப்பாளை பயன்படுகின்றது.

"இலக்கம் உடம்பு இடும்பைக்கு' என்பதால் இந்த உடல் துன்பத்திற்கும், நோய்க்கு இலக்கமானது. "உடல்நலத்தால் வெல்வோம்."

தாய்ப்பால்

பால்கள் ஐந்து என்று சொன்னார்கள் பெரியோர்கள்
அதில் பெண்பாலுக்குரிய பெருமையே தாய்பால்.
அதை தரமறுக்கும் தாய்மார்களை
எந்தப் பாலில் இணைக்க ?
அன்று பாலிற்கு பதில் தண்ணீரை ஊற்றி
அரசனை ஏமாற்றினான் தெனாலிராமன்.
இன்றோ தாய்ப்பாலிற்க பதில் புட்டிப்பாலை கொடுத்து
தன் குழந்தைகளையே ஏமாற்றுகின்றனர் தாய்மார்கள்.
வள்ளுவர் தந்ததோ முப்பால்
அம்முப்பாலினின்றும் சிறந்த முதற்பால் தாயப்பால்,
அதை தர மறுக்கும் தாய்மார்களை
எந்த பாலில் என்று சொல்ல...

அ. அனிதா
முதலாம் ஆண்டு

இளமைக்காலம்

கோடைக்காலம்
வெப்பத்திற்கு
குளிர்காலம்
பனிபொழிவிற்கு
இளமைக் காலம்
சாதிப்பதற்கு மட்டுமே!

இமயமலையின் உயரம் கண்டு
வியக்காதே!
இடுப்பில் கட்டியிழுக்கும்
ஆற்றல் உண்டு மறக்காதே

வலிகளுக்கு
வரவேற்புக் கம்பளம்
விரிக்கக் கற்றுக் கொள்
அதிலேயே நடந்து சென்று
விழிகளைத் திறக்க முடியும் உன்னால்!

பணம் பெற தேவை
உடல் உழைப்பு மட்டுமே - ஆனால்
உயர்வ பெற தேவை
உனது மூளை!

பிறர் வெற்றி கண்டு
ஏங்குவது மூடத்தனம் - அதை
தூண்ட கோலாக்கிக் கொள்வதே
அறிவுத்தனம்!

மணிமொழி கீதா
ஐந்தாம் ஆண்டு

அசாத்திய உலகம்

தாகம் இருந்து என்ன பயன்
தணிக்க தண்ணீர் இல்லையே

பசியிருந்து என்ன பயன்
புசிக்க உணவில்லையே

மருத்துவர் இருந்து என்ன பயன்
நோய்களின் தாக்கம் குறையவில்லையே

உழவன் இருந்து என்ன பயன்
உழுவதற்கு நிலம் இல்லையே

பள்ளிகள் இருந்து என்ன பயன்
பயிற்றுவிக்க ஆசான் இல்லையே

உண்மை இருந்து என்ன பயன்
உண்மையின் நன்மையை யாரும் உணரவில்லையே

வணக்கம் இருந்து என்ன பயன்
தமிழை யாரும் வணங்கவில்லையே

தமிழன் இருந்து என்ன பயன்
இலக்கணத்தை யாரும் அறியவில்லையே

இறைவன் இருந்து என்ன பயன்
அசாத்திய உலகத்தை
சாத்தியமாக்க
சாத்தியமில்லையே !

க. பழனிச்சாமி
மூன்றாம் ஆண்டு

வாழ்க்கையில்

நாள் : கிழித்துப் போடும் காலண்டர் காகிதம்
துன்பம் : ஆய்வு செய்யும் சோதனைக் குழாய்
இன்பம் : சட்டென மறையும் மின்னல்
அனுபவம் : செதுக்கி வைக்கும் சிற்பம்
தவறு : வாழ்க்கைத் தேர்வு
ஏமாற்றம் : எதிர்பார்ப்பின் பார்வை
பிறப்பு : பூமி சுற்றுலா தளம்
இறப்பு : இறுதி இடம்

வே. கீதா
இறுதியாண்டு

இலகு விடமுட்டி தைலம் ஒரு அலசல்

செல்வி. சுபாசினி
செல்வி. சங்கீர்த்ரா
மூன்றாமாண்டு

தேவையான சரக்குகள் :

எட்டி கொட்டை - 80 கி

வெள்ளை பூண்டு - 80 கி

ஆயில் பட்டை தூள் - 45 கி

நல்லெண்ணெய் - 2 லி

பால் - தேவையான அளவு

செய்முறை :

எட்டிக் கொட்டை சீவலை வெள்ளாட்டு பால் அல்லது பசும்பாலில் ஊற வைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். பூண்டை தோல் நீக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். ஆயில் பட்டையை சூரணித்துக் கொள்ள வேண்டும்.

இம்மூன்றையும் சல்வத்திலிட்டு, களிம்பாக அரைத்து கொள்ள வேண்டும். பின்னர் வானலியில் தடவி எண்ணெய் ஊற்றி அடுப்பேற்றி சிவந்து வரும் பக்குவத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பயன் :

வெளிப்பிரயோகமாக "பிடிதைலமாக" பயன்படுத்த கனத்த வளிநோய்கள் நீங்கும்.

நவீன கண்ணோட்டத்தில் ஓர் ஒப்பாய்வு :

(1) எட்டிக்கொட்டை - Strychnos nux vomica

எட்டி விதை வளிக்குற்றத்தை தன்னிலைப்படுத்தும், நரம்புகட்கு வன்மை தரும்.

மேலும் இதற்கு அகட்டுவாய்வகற்றி செய்கையும் உண்டு.

"Strychnine" is the chief alkaliod present in "Strychnos nux vomica". It is a more powerful stimulant action on the motor cells of CNS especially on Spinal Cord stimulating the pain and tactile sensations. Thus acting on all types of VADHA DISEASES.

(2) <u>வெள்ளை பூண்டு - Allium Sativum</u>

பூண்டு கார்ப்பு சுவையை உடையது, இச்சுவை வளி கூறை தன்னிலைப்படுத்தும் குணம் உடையது. மேலும் அகட்டு வாய்வகற்றி செய்கை உடையது.

"சன்னியொடு வாதந் தலை நோவு தாள்வலி..."

என்ற வெள்ளுள்ளியின் பொது குணத்தால் உணரலாம்.

Allicin is the chief alkaloid constituent of this / Garlic, Allicin has anti inflammatory activity due to its anti-prostaglandin effect, The oil extract can be applied as a massage in case of Synovial fluid inflammation and in case of Rheumatoid arthritis considered as a type of Vadha disease.

<u>3. ஆயில் பட்டை - Chukrasia tabularis</u>

இதன் சிறப்பு பண்பு - வளி முதலான தோடங்களையும், இதன் செய்கை முத்தோடமகற்றி என்பதாலும் வளி, அழல், ஐயம் மூன்றும் தன்னிலைப்படுத்தும் என்பதை உணரலாம்.

"ஆயி" லடுபுன லனலையடு நெற" - என்ற அடிகளால் முக்கூறையும் சீராக்கும் குணமாகும் என்று உணர்க.

It forms as a basic antivadha drug,

4. நல்லெண்ணெய் - Sesamum indicum

நல்லெண்ணெய்க்கு உள்ளழலாற்றி செய்கை உண்டு, மேலும் தொக்கணத்திற்கு சிறந்தது.

Sesamin is the main ingredient of this medicated oil. Sesamol is a phenolic acid, anti oxident.

The oil is well digested and absorbed. It is a vehicle for fat soluble substance. Due to presence of vitamic - c, it acts as anti - oxidant, The oil is highly stable and will not go rancid. So forms the base for ointments, and skin oils used in our Siddha system of medicare.

Gingely oil will prevent the formation of ANTI KELOIDAL SCAR. This oil is used for massage is Physiotherapy.

பால் - Milk

Milk forms the base for Purifying process in our systems.

பாலில் எட்டிக் கொட்டையை ஊற வைப்பதன் மூலம், அதன் நச்சுத்தன்மை நீக்கப்படுகிறது. பால் சிறந்த உள்ளழ லாற்றியாகவும், முக்குற்றத்தையும் போக்கும் தன்மை உடையது. இது பாடாணங்களையும், நச்சு தாவரங்களையும் தூய்மை படுத்தும்.

High mineral content helps in purification process.

ஆகவே "இலகு விடமுட்டி தைலம்" சகல வாத ரோகத்திற்கும் தொகணமாக (Massage) பயன்படுத்தலாம்

இலக்கணம் மீறிய மரபுகள்

விழுவதும் வீழ்ந்து கிடப்பதும்
எழுவதும் எழுச்சி பெறுவதும்
கிடப்பதும் கிடந்தே இருப்பதும்
காலச் சூழலின் நொடிப்பொழுது நிகழ்வு
கிளைகளை குறுக்கிய போன்சாய் மரமா
உந்தன் முயற்சி...
சிறகுடன் தொலைத்த பறத்தல் அல்ல
உந்தன் எழுச்சி...
கடலுடன் கரையைக் கரைத்தல்
அலையின் பயிற்சி...
என்றோ மறையும் கரைக்கு
யுகத்தின் யுகமாய் ஏனிந்த துடித்தல்
அதற்கே தெரியும் முயற்சி என்பது திருவினையாக்கும்
இலக்கணம் மீறிய மரபுகள் மட்டுமே
-இன்றே வெல்லும்
ஆட்டுக் கொட்டிலில் அடைபட்ட வேங்கை குட்டியின்
உதட்டுச் சாய "சித்தர்கள்"
இலக்கணம் மீறி இலக்கியம் தொலைத்து
புது சரித்திரம் படைப்போம் புறப்படுவீர்!!!

மரு. செந்தில்குமார்
முதலாமாண்டு எம்.டி.(சி)

சைவ சித்தாந்த சாத்திரங்களும் சித்தர்களும்

மரு.ந.ஆரிஃப், (எம்.டி) சித்தா

"உடம்பினை முன்னம் இழக்கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்
கொண்டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே ".

Either to I considered the body as a despicable one. Now I realise it as the Sanctum Sanctorum of the Universal being so I preserve it with utmost care.

என்று பாடிய திருமூலர் தந்த தமிழ் ஆகம நூலான திருமந்திரத்தில்தான் 'சைவசித்தாந்தம்' என்ற சொல் முதன்முதலாக ஆளப்பட்டிருக்கிறது. சைவ சித்தாந்தம் என்ற தொடர் சைவம் + சித்தாந்தம் என்று பிரிந்து நிற்கும். இவற்றுள் சைவம் என்பதன் பொருள் :

"சைவம் சிவத்தோடு சம்பந்தமாவது" என்கிறது திருமந்திரம்

"சிவம் என்ற சொல்லின் அடிப்படையில் தோன்றியது சைவம்"

என்பது குன்றக்குடி அடிகளாரின் விளக்கம்.

சிவம் என்பது என்ன ?

"தென்னாடுடைய சிவனே போற்றி

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

- திருவாசகம்

'எந்த நாட்டிலும் இறைவன் என்று போற்றப்படுகின்ற, அதே பொதுவாக உள்ள இறைவனைத்தான் தமிழ்நாட்டில் சிவன் என்று போற்றுகிறார்கள்' என்பது மாணிக்கவாசகர் தந்த திருவாசகம்.

ஆகவே, சைவம் என்பது உலகத்தில் நாம் வாழும்போதே இறப்பைப் பற்றிய அச்சத்தை வென்று வாழும் வழிமுறையைக் குறிக்கும்.

சித்தாந்தம் என்பதன் பொருள் என்ன ?

இது சித்தம் + அந்தம் எனும் இருசொற்கள் அடங்கிய கூட்டுச்சொல்.

சித்தம் - கொள்கை (System of thought)

அந்தம் - முடிவு (Conclusion)

"It is the Conclusion reached by a refutation of all system aliens of thought."

சித்தாந்தம் என்பது மெய்யுணர்வு, திளைப்புணர்வு, பரஞானம் எனவும் பொருள்படும். சித்தாந்தம் என்ற சொல்லுக்குச் சிந்தனையின் முடியும் எனவும் தத்துவ நெறியில் அறிவார்ந்த கருத்துக்களின் விளைவாகக் கிடைத்த முடிவு எனவும் பொருள் கொள்ளலாம்.

சைவசித்தாந்தம் என்பதை ஒரு தொடராக வைத்துப் பொருள் காணும் பொழுது "சைவத்தின் முடிந்த முடிவு" எனப்படும்.

சைவத்தின் உட்பிரிவாகப் 'பாசுபதம்,' 'காபாலம் ' முதலாக அறுவகையுண்டு. அவற்றை ஆராய்ந்து, வேண்டாதன விலக்கி, வேண்டுவன கொண்டு, இந்நாட்டிற்கே உரித்தாய்த் தொன்றுதொட்டு வந்த சைவத்துடன் கூட்டி முடிந்த முடிவாகக்கொண்ட சமயமே சைவசித்தாந்தம்.

<u>காலப் பின்னணி :</u>

பல்லவர்காலம் கி.பி.300 முதல் 900 வரை ஆகும். இக்காலத்திற்க்கு முற்பட்டது சங்ககாலம். இக்காலத்தில் சைவ சமயம் பற்றிய கருத்துகள் தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துபாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் காணப்படுகின்றது.

மேலும் சைவ சித்தாந்தத்தின் தொன்மையை 'சிவம்' என்ற சொல்லின் தோற்றத்தினை ஆராய்வதன் மூலம் அறிய முடியும்.

சிவம் என்ற சொல் வேதகாலத்தில் தோன்றிய இருக், யசுர், சாம வேதங்களிலும் காணப்படவில்லை, புறநானூறு போன்ற மிகப்பழைய தமிழ் நூற்களிலே கூட காணப்படவில்லை. ஆனால், புறநானூற்றிலே சிவபெருமானை குறிக்கும்.

''நீலமணி மிடற்றொருவன்'', ''கறை மிடற்றண்ணல்'' என்னும் சொல்கள் காணப்படுகின்றன.

சைவ சித்தாந்தமும், ஆகும் நூலும் தமிழருக்கே உரியதாக இருந்தும், சிவம் என்ற சொல் பழைய தமிழ் சங்க நூல்களில் காணப்படாததற்க்கு காரணங்கள் வரலாற்று காலத்திற்க்கு முன்பு நடந்த சம்பவங்கள் உணர்த்துகின்றது.

தென்னகத்தில் ஆக நூல்கள் தமிழ் அறிஞர்களிடையே மனப்பாடமாக இருந்தது. ஆனால் ஏடுகளுக்கு கொண்டுவறப் பட வில்லை. தென்னகத்தில் நிகழ்ந்த அநேக கடற்கோள்களினால் தமிழர்கள் எல்லாத் திக்குகளிலும் ஓடினார். தமிழ்களும், நாகர்களும் சிந்து, கங்கை சமவெளியை அடைந்தனர். இவர்களால் ஆகமங்கார் சொல்லாட்சியாக அங்கிருந்த வடமொழியில் ஓலைக்சுவடிகளில் எழுதப்பட்டது. எனவே, தமிழக, நாகர் பரம்பரையிலுதித்த அரசர்களிடையே சைவ சித்தாந்தம் மிகச் சிறப்பாக போற்றி வளர்க்கப் பட்டது. அங்கு ஏற்பட்ட ஆட்சிக் குலைவினால், தென்னகம் வந்த வாகடர்களும், பல்லவர்களும் சைவ சிந்தாந்தம் வளர வழிவகுத்து தந்த போதும் வடமொழியிலேயே வலுப்பெற்றிருந்தது.

தென்னகத்தில் ஆகும் நூலின் கருத்துகளை முதன்முதலில் இனிய தமிழில் தந்தவர் திருமூலர். இவர் திருமந்திரத்தில் ஒன்பது தந்திரங்களாக கூறியுள்ளார். இது பன்னிரு திருமறைகளில் பத்தாம் திருமறையாகும்.

இந்நூல் இரண்டு அதிகாரங்களைக் கொண்டது.

1. பொது அதிகாரம் 2. சிறப்பு அதிகாரம்

இதில் பொது அதிகாரத்தின் இரண்டு இயல்களான பிரமாய இயலும், இலக்கண இயலும் சித்தமருத்துவத்தின் அடிப்படையாக உள்ள அருவுருப்பொருள்களான பதி, பசு, பாசம் இவற்றின் உண்மை விளக்கத்தையும் இலக்கணத்தையும் தெளிவுறுத்துகிறது.

பதி, பசு, பாசத்தை விளக்கும்படியே சிவாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிவாலயங்களில் சிவலிங்கத் திருவுருவமும், திருவுருவத்திற்கு முன்னர் நந்தியும் பலிபீடமும் இடம்பெறுகின்றன. இவை சைவசித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளிலக்கணங்களையே சிவலிங்கம், நந்தி, பலிபீடம் முறையே உணர்த்துகிறது.

<u>சித்தர் பாடல் அமைப்பு</u>

இவர்கள் பழைய தமிழ் இலக்கணங்களையும், மரபுகளையும்பொருட்படுத்தாது, கற்றறிந்த புலவர்க்காக மட்டும் எழுதாமல் பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் நாட்டுப்புறப் பாடல் வடிவிலும் கும்மி, சிந்து, கண்ணி என்னும் பாவகைகளைக் கொண்டு 'மக்கள் இலக்கியம்' ஆக அமைத்தனர்.

இவை கேள்விநடை, பழமொழி நடை, பேச்சு நடை, வியப்பு நடை, உருவக நடை, குறிப்புத்தொடர் தடை, விளிநடை போன்ற அமைப்பில் உள. இதில் முன்னிலைப்படுத்திக் கூறும்பாங்கே மிகுதியாகக் காணப்படுகின்றது. பெண், மக்கள், மனம், பிறபொருள்கள், மாணவன் ஆகியவற்றை முன்னிலைப் படுத்தியுள்ளனர். எல்லாப் பாடல்களிலும் புராண இதிகாசக்கதைகள், இலக்கிய மேற்கோள்கள், சமுதாய உவமைகள், தத்துவ உவமைகள் ஆகியன விரவியுள்ளன.

<u>சித்தர்கள் சமுதாயப்பற்று :</u>

சித்தர்கள் யோகச்செயல்முறையினால் உடலினை நிலைக்கச்செய்து மெய்ம்மை

யுணர்ந்து, சமுதாயத்தை நன்னெறியில் செலுத்த விரும்பியவர்கள். இவர்கள் உண்ணாமல், உறங்காமல், இடம் பெயராமல், வெயில், மழை, பகல், இரவு என்று பாராமல் இருந்து சமாதி நிலையை அடைந்தவர்கள். இவ்வாறு சமாதி நிலையிலிருந்து வெளிவரும்போது தாம் பெற்ற ஞானத்தை மக்களுக்கு எடுத்துரைத்தனர்.

சித்தர்கள் மூட நம்பிக்கைக்கு இடந்தரா தவர்கள். சடங்குகளையும், சடங்குகளோடு கூடிய வழிபாடுகளையும் அறவே வெறுத்தனர். கடவுள் பெயர்கள் பலவாக இருப்பினும் 'இறைவன் ஒருவனே' என்ற கருத்தை வலியுறுத்தினர்.

சித்தர்கள் மக்களின் சமுதாய வாழ்வில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். பாடுபட்டு ஈட்டிய பொருளைத் தவறான வழிகளில் செல்கின்ற மக்களை கண்டித்தனர்.

சாதிகளைப் பற்றிக் குறிப்பிடும் போது பிறப்பினால் தோன்றவில்லை, செய்கின்ற தொழிலுக்கேற்ப பிரிக்கப்பட்டிருக்கின்றன என்றும் இழிவான செயல்களைச் செய்பவனே கீழ்ச் சாதியினன் என்றும் உரைத்தனர்.

சாத்திர நூல்களின் தனித்தன்மை :

சைவசமய நூல்களைச் சாத்திரங்கள், தோத்திரங்கள் எனப்பகுக்கலாம். சாத்திரங்கள் அறிவு நூல்களாகும். தோத்திரங்கள் பன்னிரு திருமறைகளாகும். இவை யாவும் அன்பு நூல்கள்.

சைவசித்தாந்தம் சிவாகமங்களின் பொருளாகக் கருதப்படுகிறது. இது திருமுறைகளை அடுத்துத்தோன்றிய சித்தாந்த சாத்திர நூலாகும்.

திருமூலர் கண்ட உள்பொருள் என்ன ?

திருமூலர்க்கு பின்வந்த சங்கரர் (கி.பி 788 - 820) ''அத்துவிதம்'' என்ற கொள்கையைத் தெளிவுபடுத்தியவர். இவர் ''பிரம்மம் அன்றே உள்பொருள், உலகம் பிரம்மத்தின் தோற்றமே'' என்ற கொள்கையை பரப்பினார். இவர் பிரமம் எனக்கூறுவது உடம்பு தோறும் திகழும் உணர்வுக்கு அடிப்படையாக உள்ள உயிரையே. இவரது கொள்கை ''கேவலாத்துவிதம்'' எனவும் கூறப்படும்.

இ.ராமாநுசர் (கி.பி 11 ஆம் நூற்றாண்டு). இவர் ஆழ்வார்களுடைய திவ்வியப் பிரபந்தங்களின் பக்தி நெறிக்கு மாறுபடாதபடி பிரம்ம சூத்திரங்களுக்கு உரைசெய்து சங்கரர் கொள்கையை மறுத்துக்கூறினார். இவரது கொள்கை விசிட்டாத்துவிதம். அதாவது, இறுதியான உண்மை ஒன்றே என்றாலும் அவ்வொன்று விசேடணத்தோடு (Attributes) கூடியது எனவும் அவ்விசேடணம் யாதெனில் பிரம்மத்துக்கு உலகு, உயிர்கள் என இரண்டு உடல்கள் உண்டு என்பதேயாம்.

இராமநுசருக்கு பின் வந்தவர் மெய்கண்டார் (கி.பி 13 ஆம் நூற்றாண்டு). இவரே சைவசித்தாந்தை வளர்த்தவர். மெய்கண்டாருக்கு பின் வந்த மத்துவரின் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு) கொள்கைகள் மெய்கண்ட சாத்திரங்களின் பொருள் நிலையைத் தெளிவாக உணர்தற்கு உதவும்.

பகுத்தறிவாகிய மனவுணர்வை ஒருங்கே பெற்றுக் கல்வியறிவொழுக்கங்களால் வாழ்க்கையில் மேன்மேலும் உயர்ச்சி பெறுவதற்குரிய விழைவு, அறிவு, செயல் என்னும் மூவகையாற்றலையும் முழுமையாய் செயல்படுத்தி,

இன்று விருட்சம்போல் நிற்கும் நமது மருத்துவத்தின் வேர்களாகிய சைவ சித்தாந்த கருத்துகளில் தெளிந்த ஞானம் கொண்டு, அதன் அடிப்படையில் நிறைமொழிமாந்தர் தந்த மருத்துவத்தை ஆராய்ந்து நிலைபெறச் செய்வோம்.

நிலா

நீ பெண்ணா ஆணா
ஆடையெடுத்து தைப்பதற்கு

சி. பிரபு
ஐந்தாம் ஆண்டு

விழித்தெழு

மாக்கள் வரைந்த
வட்டத்தினால் - அவர்கள்
விதைத்த
　　சாதி வித்தினால்
முளைத்த முட்டாள்கள்
　　வைத்த பற்றினால்
ஊறியது வெறி
நேர்ந்தது யுத்தம்
　　யுத்தத்தில் ஏந்திய கத்தியினால்
　　பெருக்கெடுத்து ஓடியது
மனித இரத்தம்
　　மறைந்து ஓடியது
மனிதாபிமானம்
　　சரித்திர ஏட்டை
புரட்டி பார்
　　பலகோடியில்
சிலரே சாதனையாளர்கள்
　　அவர்கள் சாதனையாளர்களாகவே
பிறக்கவில்லை
　　ஏனெனில் எந்த கருப்பையும்
அவன் பிறப்பை
　　தடுக்கவோ, தள்ளி வைக்கவோ
　　முடியாது
அவன் உருவாக்கப்படவில்லை
　　காரணம் அவன்
களிமண் பொம்மையில்லை
　　நம்பிக்கையுடன்
விழத்தெழு
　　நாளைய உலகம் உன் கையில்

செ. க. சுரேசு
மூன்றாம் ஆண்டு

சுவாசத்திற்கு சுவாசக் குடோரி மாத்திரை

சித்த மருத்துவ கண்ணோட்டம்

நீ. புவனேஸ்வரி
சௌ. சிவசங்கரி
இறுதியாண்டு

நோக்கம் :

அறிவியல் மயமாக்கப்பட்ட இந்த உலகில் கிருமியின் காரணமல்லாமல் வரும் நோய்களிலே ஆஸ்துமாவும் ஒன்று. இன்றைய நிலையில் இந்த நோய் பெரும்பான்மையான மனித சமுதாயத்தை வாட்டி எடுக்கிறது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தற்காலத்தில் தவிர்க்க முடியாதவைகளான வாகனங்களிலிருந்து வெளிப்படும் தூசுகளும், வாசனைப் பொருள்களும், கால நிலை மாறுபாடுகளும் சுவாசப்பாதையில் ஒவ்வாமையை ஏற்படுத்தி மார்பை இறுக்கி மூச்சுத் திணறலை உண்டாக்குவதுதான் இதற்கு முதற் காரணமாக கூறப்பட்டுள்ளது.

